பக்கங்கள் எட்டு

# வலம்புரி

VALAMPURI

விலை ரூபா 5.00

சங்கு 01 வள்ளுவர் ஆண்டு 2031 ஐப்பசி 02 புதன்கிழமை (18-10-2000) தொ பேசி:- 3378 ஒலி: 303

பொதுசன நூலகம் யாழ்ப்பாணம் நாவாந்துறைப் படிப்பகம்

## தேசிய ஐக்கிய முன்னணி விதித்த நிபந்தனையால்

# பொதுஜன ஐக்கிய முன்னணி அரசு இக்கட்டான நிலையில்!

(கொழும்பு)

தேசிய ஐக்கிய முன்னணிக்கும் பொதுஜன ஐக்கிய முன்னணிக்கும் இடையே அமைச்சுக்களைப் பகிர்ந்துகொள்வதில் தொடர்ந்தும் இழுபறி நிலை காணப்படுவதால் மந்திரி சபையை அமைக்கும் பணி பிரதமர் ரட்ணசிறி விக்கிரம நாயக்காவுக்குப் பெருஞ்சிரமத்தை அளித்துள்ளது.

சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் இணைத்தலைவர் திருமதி பேரியல் அஷ்ரப் தேசிய ஐக்கிய முன்னணி நாடாளுமன்ற உறுப்பினர்கள் பொதுஜன ஐக்கியமுன்னணி அரசுக்கு நிபந்தனையற்ற ஆதரவு வழங்க வேண்டும் என்று 'பக்ஸ்' மூலம் விடுத்த வேண்டுகோளினால் மந்திரிசபை அமைப்பதில் மேலும் இழுபறி நிலையை ஏற்படுத்தியுள்ளது.

சிறிலங்கா முஸ்லிம் காங்கிரசின் மற்றொரு இணைத் தலைவரான ரவூப் ஹக்கீம் இற்கும் பொதுஜன ஐக்கிய

(8ம் பக்கம் பார்க்க)

## ★ பதினோராவது

# புதிய பாராளுமன்றம் இன்று கூடுகிறது!

## கண்ணிவெடி அகற்றிய போது மூன்று படையினர் காயம்

சாவகச்சேரிப் பகுதியில் கடந்த ஞாயிற்றுக்கிழமை புலிகள் புதைத்து வைத்திருந்த நிலக் கண்ணி வெடியை அகற்றிய சமயம் அது வெடித்ததில் படைத்தரப்பில் மூவர் காயமடைந்துள்ளதாக விஷேட ஊடகத் தகவல் நிலையம் அறிவித்துள்ளது.

இதே வேளை நுணாவிலில் நேற்று முன்தினம் புலிகளின் பாதுகாப்பரண் மீது படையினர் மேற்கொண்ட தாக்குதலில் 5 புலிகள் உயிரிழந்துள்ளதாகவும் விஷேட ஊடகத் தகவல் நிலையம் தெரிவித்துள்ளது. (ந-4)

## புதிய சபாநாயகர் தெரிவாவார்

(நமது நிருபர்)

**இலங்கையின் பதினோராவது பாராளுமன்றம் இன்று சுபநேரம் பிற்பகல் 2. 30 மணிக்கு ஆரம்பமாகவுள்ளது.**

**பாராளுமன்றத்தின் இன்றைய முதல் அமர்வின்போது பதினோராவது பாராளுமன்றத்தின் சபாநாயகர் தெரிவு செய்யப்படவுள்ளார். சபாநாயகர் தெரிவின் பின்னர் புதிய பாராளுமன்ற உறுப்பினர்கள் சபாநாயகர்முன்னிலையில் சத்தியப் பிரமாணம் செய்து கொள்வார்கள்.**

பதினோராவது பாராளுமன்றத்தின் முதலாவது கூட்டம் இன்று ஆரம்பமாகின்றது.

மக்களால் தெரிவு செய்யப்பட்ட 196 பாராளுமன்ற உறுப்பினர்களும் தேசியப் பட்டியல் மூலம் கட்சிகளால் தெரிவு செய்யப்பட்ட 29 உறுப்பினர்களுமாக மொத்தம் 225 உறுப்பினர்களும் சேர்ந்து அடுத்துவரும் ஆறு ஆண்டுகளுக்குரிய புதிய சபாநாயகர் ஒருவரையும் சபை முதல்வரையும் தெரிவு செய்வார்கள்.

தெரிவுசெய்யப்பட்ட புதிய சபாநாயகர் முன்னிலையில் 225 நாடாளுமன்ற உறுப்பினர்களும் சத்தியப்பிரமாணம் செய்துகொள்வார்கள்.

புதிய பாராளுமன்றத்தின்

(8ஆம்பக்கம் பார்க்க)

## அவசரகால சட்ட நீடிப்புபிரேரணைக்கு சிஹலஉறுமய ஆதரவு வழங்கும்

(கொழும்பு)

இன்று கூடும் பதினோராவது பாராளு மன்றத்தில் பொதுஜன ஐக்கிய முன்னணி சமர்ப்பிக்கும்அவசரகாலச் சட்ட நீடிப்பு பிரேரணைக்கு சிஹல உறுமயக் கட்சி முழுமையான ஆதரவு வழங்கும்.

இவ்வாறு நேற்று நடைபெற்றசெய்தியாளர் மாநாட்டில்சிஹலஉறுமயக்கட்சி பொதுச் செயலாளர் திலக் கருனாரத்தினதெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில் வடக்குகிழக்கில்

(8ம் பக்கம் பார்க்க)

## பதினோராவது பாராளுமன்றில்

# எந்தஒரு,பெரும்பான்மைக் கட்சிக்கும் நாம் ஆதரவு வழங்கமாட்டோம்

## தமிழ் தலைவர்கள் தெரிவிப்பு

அமைக்கும் பொதுஜன ஐக்கிய முன்னணிக்கோ அல்லது

## அநுராவை சபாநாயகராக்க கூட்டணி ஆதரவு!

(கொழும்பு)

இன்று கூடவுள்ள பதினோராவது பாராளுமன்றத்தில்

வழங்குமாறு கோரியுள்ளார்.

ரணிலின் இக் கோரிக்கைக்கு தமிழர் விடுதலைக்

(கொழும்பு)

இன்று கூடவுள்ள பதினோராவது பாராளுமன்றத்தில் சபாநாயகர் தெரிவில் ஐக்கிய தேசியகட்சிக்கு ஆதரவு தருமாறு அதன் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர்களைக் கேட்டுள்ளார்.

கொழும்பு மாநகர முதல்வரின் அலுவலகத்தில் நேற்று நடைபெற்ற சந்திப்பின் போதே அவர் இந்த ஆதரவை வழங்குமாறு கோரியுள்ளார்.

ரணிலின் இக் கோரிக்கைக்கு தமிழர் விடுதலைக் கூட்டணி ஆதரவு வழங்கியுள்ளதென தெரியவருகிறது.

இச் சந்திப்பில் கூட்டணியின் செயலாளர் இரா. சம்பந்தன், மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கம் உட்பட பல முக்கிய பிரமுகர்கள் கலந்து கொண்டனர். (4)

## "சிற்றி ஒவ் றிங்கோ" கப்பல் நாளை புறப்படும்

(யாழ்ப்பாணம்)

பயணிகள் சேவையில் ஈடுபடும் 'சிற்றி ஒவ் றிங்கோ' கப்பல் நாளை வியாழக்கிழமை பருத்தித்துறையில் இருந்து திருமலைக்குப் புறப்படுமென யாழ். சிவில் நிர்வாகக் காரியாலயம் அறிவித்துள்ளது.

இக் கப்பலில் பயணம் செய்வதற்கு பயண அனுமதி பெற்றவர்கள் நாளை காலை 7.30 மணிக்கு பயண ஆயத்தங்களுடன் யாழ். சிங்கள மகா வித்தியாலயத்திற்கு சமுகமளிக்குமாறு சிவில் நிர்வாகக் காரியாலயம் அறிவித்துள்ளது. (ந-2)

## நாடாளுமன்ற சபை முதல்வராக றிச்சட் பத்திரண நியமனம்

(கொழும்பு)

இன்று கூடவுள்ள பதினோராவது புதிய நாடாளுமன்றத்தின் சபை முதல்வராக கல்வி உயர்கல்வி அமைச்சர் 'ரிச்சட்பத்திரண' நியமிக்கப்பட்டுள்ளார்.

இது குறித்த நியமனக் கடிதத்தை பாராளுமன்றத்

(8ம் பக்கம் பார்க்க)

## தமிழ் தலைவர்கள் தெரிவிப்பு

(கொழும்பு)

புதிய பாராளுமன்றத்தில் எந்தவொரு கட்சிக்கும் ஆதரவு வழங்கப் போவதில்லை யென தமிழர் விடுதலைக் கூட்டணி, ரெலோ, அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ் ஆகியன தனித்தனியாகக் கருத்துத் தெரிவித்துள்ளன.

பாராளுமன்றத்தினை அமைக்கும் பொதுஜன ஐக்கிய முன்னணிக்கோ அல்லது ஐக்கிய தேசியக் கட்சிக்கோ நாம் ஒருபோதும் ஆதரவு அளிக்கப் போவதில்லையென தமிழர் விடுதலைக் கூட்டணி

(8 ஆம் பக்கம் பார்க்க)

## நாடாளுமன்ற உறுப்பினராகும் வாய்ப்பை வரதர் இழந்தார்

### பொ.ஐ.முன்னணி கடைசிநேரத்தில்காலைவாரியது

(கொழும்பு)

பொதுஜன ஐக்கிய முன்னணியின் தேசியப் பட்டியல் பாராளுமன்ம் உறுப்பினர்களின் பெயரில் முன்னாள் வடக்குக் கிழக்கு மாகாண முதலமைச்சர் அ.வரதராஜப் பெருமாளின் பெயர் இடம் பெறவில்லை.

இதனால் வரதராஜப்பெருமாள் நாடாளுமன்ற உறுப்பினராகும் வாய்ப்பை இழந்துள்ளார்.

தமிழீழத்தைப் பிரகடனப் படுத்திய வரதராஜப்பெருமாளுக்கு பொதுஜன ஐக்கிய முன்னணி தேசியப்பட்டியலில் இடமளிக்கக்கூடாது என்று பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக்கட்சி உட்பட பல அரசியல் கட்சிகள் எதிர்ப்புத் தெரிவித்திருந்தன. இவ்வெதிர்ப்புகளுக்குப் பயந்தே பொதுஜன ஐக்கிய முன்னணி இவரின் பெயரை தேசியப்பட்டியலில் இருந்து

(7ஆம் பக்கம் பார்க்க)

## நேரடி மோதலில் இருவர் உயிரிழப்பு

(வவுனியா)

கடந்த மாதம் 18ந் திகதி ஊரெழுவில் ஏற்பட்ட படையினருடனான நேரடி மோதலின் போது

(8 ஆம் பக்கம் பார்க்க)

## பதினோராவது பாராளுமன்றத்தின் சபாநாயகராக 'அநுரா' ஏகமனதாக தெரிவாவார்

(கொழும்பு)

பதினோராவது பாராளுமன்றத்தின் சபாநாயகர் பதவி ஜனாதிபதியின் சகோதரர் அநுரா பண்டார நாயக்காவை நிறுத்துவதென ஐக்கிய தேசியக் கட்சியின் செயற்

(8ஆம் பக்கம் பார்க்க)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாள்தமி

பொதுசன நூலகம் யாழ்ப்பாணம்

## சிறு விளம்பரம்

சீமெந்துக் கூரை ஓடுகள் (LMCRS)

லோகேஸ் கூரை ஒட்டுத் தொழிற்சாலை (இணுவில்)

ஜீ. ரி. சற், அரசசார் பற்ற நிறுவனங்களால் புனரமைப்பு செய்யப்படும். வீட்டுத் திட்டங்கள், பாடசாலை கட்டடங்கள் போன்றவற்றிற்கு பயன்படும் சீமெந்துக்கூரைஓடுகள், முகட்டோடுகள் விற்பனைக்குண்டு.

இயந்திரம்மூலம் தயாரிக்கப்படும் கொங்கிறீற் கற்களும் விற்பனைக்குண்டு. தொழிற்சாலையும், விற்பனை நிலையமும் லோகேஸ் கூரை ஒட்டுத் தொழிற்சாலை இணுவில். (1832)

## மணவாள கோலம்

(புலோலி)

புலோலி-மந்திகைகண்ணகை அம்மன்ஆலய வருடாந்தமணவாளக்கோல திருவிழாவும் ஏகதினஇலட் சார்ச்சனையும் இன்று நடைபெறுகிறது. (உ-52)

## இராசி பலன்

18.10.2000

(ஐப்பசி 2, புதன்)

பஞ்சமி மு ப 8.23 வரை

மிருகசீரிடம் மாலை 6.15 வரை

ராகுகாலம் 12.02- 1.32

சுபநேரம் 4.32- 6.02

சித்தம்

மேடம்

சென்ற இடத்தில் செல்வாக்கு, தன வரவு, சந்தோசமான சம்பவம், முயற்சி வெற்றி.

இடபம்

கௌரவக் குறை, காரியத் தாமதம், சுபசெலவு, வாக்குச் சலகம்.

மிதுனம்

போசன சுகம், சயன சுகம், புதிய பொருள் சேர்க்கை, தெய்வ சிந்தை.

கடகம்

காரியத் தாமதம், பிரயாணம், தனவிரயம், சயனசுகக்

---

கண்டிமாவட்டத்தில்

# வன்முறையில் பாதாளக் கும்பல்

# அரசியல்வாதிகளின் ஏற்பாடாம்

(கண்டி)

கொழும்பு பாதாள உலகக் கும்பலைச் சேர்ந்தவர்கள் எனக் கருதப்படுவோர் தேர்தல் தினத்தன்றும் அதற்குப் பின்னரும் கண்டியில் வன்முறைச் சம்பவங்களில் ஈடுபட்டனராம்.

சுமார் 35 பாதாள உலகக் கும்பலைச் சேர்ந்தவர்களை வன் செயலில் ஈடுபடுத்த வென முக்கிய அரசியல் வாதிகள் அழைத்து வந்ததாகவும் பொலிஸ் தலைமையகம் தகவல் வெளியிட்டுள்ளது.

தேர்தல் நடைபெறுவதற்கு ஒரு மாதம் முன்பு கொழும்பிலிருந்து கண்டிக்கு ஆடம்பர வாகனங்களில் அழைத்துச் செல்லப்பட்டு நண்பர்களின் வீடுகளிலும், விடுதிகளிலும் இவர்கள் தங்கவைக்கப்பட்டதாகவும் இவர்களுக்கான உயர்வகை உணவுகளும், குடிபானங்களுக்கும் பெருந்தொகைப்பணம் செலவிடப்பட்டதாகவும் பொலிஸ் தலைமையகத் தகவல்கள் தெரிவித்துள்ளன.

அத்துடன் தேர்தல் தினத்துக்கு முதல் தினம் மேற்படி பாதாள உலகக் கும்பலைச் சேர்ந்தவர்களிடம் ஆயுதங்கள் கையளிக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ)

## பாலியல் வல்லுறவு சம்பவம்

## இளைஞர்கள் விளக்கமறியலில்

(யாழ்ப்பாணம்)

இருவெவ்வேறு பாலியல் வல்லுறவுக்குற்றங்களில் ஈடுபட்டார்கள் என்ற சந்தேகத்தின் பேரில் இரண்டு இளைஞர்கள்யாழ். சிறையில்விளக்கமறியலில் இடப்பட்டுள்ளனர்.

மேற்படி சம்பவத்துடன் தொடர்புடையவர்களான 21 வயதான துரைசாமி சிறிசங்கர் (உடுவில் மல்வம்) தேவராசா நாகேஸ்வரன் ஆகிய இருவரையும் இம்மாதம் 27 ஆம் திகதி வரை விளக்க மறியலில் இடுமாறும் மல்லாகம் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. (க-12)

## சர்வதேச பெண்கள் கிரிக்கெட்போட்டி

## இலங்கை அணியும் பங்குபற்றும்

### வரைவில் நியூசிலாந்து புறப்பாடு

(வெலிங்டன்)

நியூசிலாந்தில் நடைபெறவுள்ள பெண்களுக்கான சர்வதேசஉலகக்கிண்ணகிரிக்கெட் சுற்றுப்போட்டியில் இலங்கை அணியில் 14 பேர்தெரிவாகியுள்ளனர்.

பெண்கள் பிரிவில் பிரபல விளையாட்டுவீரர் "ரசஅஞ்சனி சில்வா" அணித்தலைவியாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

இம்மாதம் 28 ஆம் திகதி நியூசிலாந்துஆக்லென் நகரில் ஆரம்பமாகும் மேற்படிப் போட்டியில் 8 நாடுகள் பங்குபற்றவுள்ளன.

இவற்றில் இலங்கை, இங்கிலாந்து, நியூசிலாந், அவுஸ்ரேலியா, அயர்லாந்து, தென்னாபிரிக்கா, நெதர்லாந், இந்தியா உள்ளடங்கும். (க-த

## முறைப்பாடுகள் நீடிப்பு

(கொழும்பு)

பொலிஸ் தலைமையக தேர்தல் செயலக செயற்பாடுகள் மேலும் ஒரு மாதத்திற்கு நீடிக்கப்பட்டிருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

பதிவு செய்யப்பட்ட தேர்தல் வன்முறைகள் தொடர்பான முறைப்பாடுகளின் விசாரணைகள் முடிவடையாமையே இதற்குக் காரணம் என கூறப்படுகிறது.

மேற்படி வன்முறைகள் தொடர்பான விசாரணைகள் 3 வாரத்திற்குள் நடத்தி முடிக்கப்படும் எனவும் அந்தந்தப் பொலிஸ் பிரிவு பொறுப்பாளர்களின் அனுசரணையுடன் விசாரணைகள் நடாத்தப்படும் எனவும் பிரதி பொலிஸ்மா அதிபர் ஏ. ஆனந்தராஜா தெரிவித்துள்ளார். (க-உ)

## வழமை நிலைக்கு திரும்பும் காத்தான்குடிப் பிரதேசம்

(மட்டக்களப்பு நிருபர்)

பொதுத் தேர்தலின்பின் காத்தான்குடிப் பிரதேசம் கடந்த திங்கட்கிழமை முதல் முழுமையான அமைதிநிலைக்குத் திரும்பியுள்ளது. இரவு நேரங்களில் தடைப்பட்டிருந்த மின் விநியோகமும் வழமைக்குத்திரும்பியுள்ளது.

அரசியல் கட்சிகளின் ஆதரவாளர்களிடையே ஏற்பட்ட பெரும் மோதல் சம்பவங்களினால் கடந்த ஒருவாரகாலமாக காத்தான்குடிப் பிரதேசம் அமைதியிழந்து காணப்பட்டது.

இக்கலவர காலப்பகுதியில் சுமார் 50க்கும் அதிகமான வீடுகள் நாசமாக்கப்பட்டதுடன், 10க்கும் அதிகமானவர்கள் காயமடைந்து வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

ஊரடங்குச் சட்டம் முற்றாக நீக்கப்பட்டு, இன்று கடைகள், பாடசாலைகள், பொதுச்சந்தை அனைத்தும் திறக்கப்பட்டுள்ளன. நகரில் சனநடமாட்டமும் காணப்படுகின்றது. (க-60)

# பிரதிஅமைச்சர் ஹிஸ்புல்லாவை தேசியப்பட்டியல்மூலம் எம்பியாக்கவும்

## பொது அமைப்புக்கள் கோரிக்கை

(மட்டக்களப்பு நிருபர்)

11வது பாராளுமன்றப் பொதுத்தேர்தலில் சொற்ப வாக்கு வித்தியாசத்தில் வெற்றிபெறத் தவறிய பிரதியமைச்சரும், தேசிய ஐக்கியமுன்னணி சிரேஷ்ட உப தலைவருமான எம்.எல்.ஏ. எம். ஹிஸ்புல்லாவை தேசியப் பட்டியல் மூலம் பாராளுமன்ற உறுப்பினராக்குமாறு கோரி மட்டக்களப்பு மாவட்டத்தைச் சேர்ந்த 500க்கும் மேற்பட்ட பொதுநல சமூக மகஜர்களை அனுப்பியுள்ளதாக 70 அமைப்புக்களை உள்ளடக்கிய காத்தான்குடி பள்ளிவாசல்கள், முஸ்லீம் நிறுவனங்களின் சம்மேளன பிரதித்தலைவர் ஏ.எல்.அப்துல் ஜவாத் தெரிவித்தார்.

சுமார் 30ஆயிரம் வாக்குகளை தேசிய ஐக்கிய முன்னணிக்குப் பெற்றுக்கொடுத்தவர் ஹிஸ்புல்லா. சிலதீய சக்திகளினால் அவரது பிரதிநிதித்துவம் திட்டமிட்டு பறிக்கப்பட்டுள்ளது. அந்த இடத்தைத் தேசிய பட்டியல்மூலம் நிரப்ப வேண்டுமெனக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (க-60)

## தொழுகையில் ஈடுபட்டிருந்தோர் மீது தாக்குதல் நடவடிக்கை

---

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் இலங்கை

தொழிலாளர் கல்விச் சான்றிதழ் கற்கை நெறி 2000

தொழிலாளர் கல்வி டிப்ளோமா கற்கை நெறி 2000

முதலாம் / இரண்டாம் அரையாண்டுப் பரீட்சை

மேற்படி பரீட்சைக்கு தகுதிவாய்ந்த மாணவர்களிடமிருந்து விண்ணப்

சோர்கை, தெய்வ சிந்தை.

**கடகம்**

காரியத் தாமதம், பிரயாணம், தனவிரயம், சயனசுகக் குறைவு.

**சிங்கம்**

தன்லாபம், கீர்த்தி, குடும்ப சுகம், நண்பர்கள் சந்திப்பு.

**கன்னி**

முயற்சிகள் கைகூடும், தொழில் விருத்தி, கடமைகள் நிறைவேறல்.

**துலாம்**

முயற்சியில் நேரடியாக ஈடுபடல், கட்டுப்படுதல், பயந்த சுபாவம், வயிற்று வலி.

**விருச்சிகம்**

எதிர்பாராத மனஸ்தாபம், நோய் பீடித்தல், நண்பர்கள் விரோதம், விருந்துபசாரம்.

**தனுசு**

பிரயாணம், சுவாரஸ்யம், போசன சுகம், கீர்த்தி.

**மகரம்**

முயற்சி விருத்தி, சத்துரு ஜெயம், சந்தோசமான செய்தி, தனவரவு.

**கும்பம்**

புத்திரரால் கவலை, சிறு வியாதி, காரியத் தடங்கல், தாழ்வு நிலை.

**மீனம்**

தன்னம்பிக்கைக் குறைவு, இலட்சுமிகரம், பயந்த சுபாவம்.

(பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது)

**வளவன்**

---

ளுமன்ற உறுப்பினராக்குமாறு கோரி மட்டக்களப்பு மாவட்டத்சைச் சேர்ந்த 500க்கும் மேற்பட்ட பொதுநல சமூக சேவை அமைப்புக்கள் தேசிய ஐக்கிய முன்னணித் தலைவர் திருமதி பேரியல் அஷ்ரப்பிற்கு

---

★ **பேராதனை பல்கலை மாணவன்**

# வரப்பிரகாஷின் மரணம் தொடர்பான விசாரணையில் முக்கிய நபர்கள் விடுதலை

(கொழும்பு)

பேராதனை பல்கலைக்கழக பொறியியல் பீடமாணவன் வரப்பிரகாஷின் மரணம் தொடர்பாக விசாரணையில் 2ம்,6ம் எதிரிகள் தவிர்ந்த அனைவரும் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

கண்டி நீதிமன்றில் நடைபெற்ற இவ்வழக்கு முதலாம் எதிரியின்றியே நடத்தப்பட்டது இங்கு குறிப்பிடத்தக்கது.

இதேவேளையில் 2ம், 6ம் எதிரிகள் மீதான வழக்கு விசாரணை அடுத்த தவணைக்கு ஒத்திவைக்கப்பட்டதாகவும் நீதிமன்ற தகவல்கள் தெரிவிக்கின்றன.

(க)

# பஸ் டிப்போ இன்ஸ்பெக்டர் பொலிஸாரால் கைது

(கொழும்பு)

கல்முனையில் நடந்த வாகன குண்டுவெடிப்புடன் தொடர்புடையவர் எனக் கருதி டிப்போ இன்ஸ்பெக்டர் ஒருவர் கடந்த வெள்ளிக்கிழமை கைது செய்யப்பட்டுள்ளார்.

நியூ ஈஸ்ரோண் பஸ் கொம்பனி டிப்போவின் இன்ஸ்பெக்டரான கந்தையா தங்கவேல் (வயது 53)என்றபட்டிருப்பு வாசியே அம்பாறை நாசகார தடுப்பு பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டவராவார்.

கடந்த மாதம் 18 ஆம் திகதி கல்முனையில் இடம்பெற்றவாகன வெடிகுண்டு வெடிப்பில் இரு பொலிஸார் கொல்லப்பட்டமை தெரிந்ததே.

(உ)

---

# தொழுகையில் ஈடுபட்டிருந்தோர் மீது தாக்குதல் நடவடிக்கை

**ஓட்டமாவடியில் சம்பவம்**

ஓட்டமாவடியில் பள்ளி வாசலுக்குள் புகுந்து அங்கு தொழுகையில் ஈடுபட்டிருந்தோர் மீது இநாணுவத்தினர் தாக்குதல் நடத்தியமை தொடர்பாக முஸ்லிம் அமைப்புகள் கண்டனம் வெளியிட்டுள்ளன.

கடந்த 14 ஆம் திகதி சனிக்கிழமை ஓட்ட மாவடிப்பகுதி கட்சி ஆதரவாளர்களிடையேயான கருத்து முரண்பாடு கைகலப்பில் முடிவடைந்தது.

இதனை அடுத்து அங்கு சென்ற இராணுவத்தினர் அங்கில் இருந்த பள்ளிவாசலுக்குள் நுழைந்து அங்கு தொழுகையில் ஈடுபட்டிருந்தோரைக் கண்மூடித்தனமாகத் தாக்கினர்.

அத்துடன் மாவடிச் சோலை வீடுகளில் புகுந்து அங்கிருந்த பெண்கள் மீதும் தாக்குதல் நடத்தினர்.

இச் சம்பவங்களில் பலர் படுகாயமடைந்துள்ளனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இச் சம்பவங்கள் முஸ்லிம் சமூகத்தவரிடையே பெரும் குழப்ப நிலையை உருவாக்கியிருப்பதாகவும் தெரியவந்துள்ளது,

(உ)

---

**அரையாண்டுப் பரீட்சை**

மேற்படி பரீட்சைக்கு தகுதிவாய்ந்த மாணவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

பரீட்சார்த்திகள் தொழிலாளர் கல்வி அலகில் பெறப்பட்ட விண்ணப்பப்படிவத்தினை பூர்த்தி செய்து எதிர்வரும் 28-10-2000 திகதிக்கு முன்பாக சமர்ப்பிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

மீள்பரீட்சைக் கட்டணமாக ஒரு பாடத்திற்கு ரூபா 50/- வீதம் பல்கலைக்கழக மக்கள் வங்கிக் கிளையிலோ அல்லது நிதியாளர் யாழ். பல்கலைக் கழகத்திலோ செலுத்திப் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டை விண்ணப்பப் படிவத்துடன் இணைத்து சமர்ப்பிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

மேலதிக விபரங்களுக்கு தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:-

**க. க. அருள்வேல்,**
இணைப்பாளர்,
தொழிலாளர் கல்வி அலகு,
யாழ். பல்கலைக்கழகம்.

**பதிவாளர்**

17-10-2000 (கி-886)

# இந்து சமய கலாசார அமைச்சு விரைவில் உருவாக்கப்படும்

(கொழும்பு)

வடமாகாண அபிவிருத்தி இந்து சமய கலாசாரத்துக்கு தனியான அமைச்சு ஒன்று உருவாக்கப்படும்என ஈ.பி.டி.பியின் செயலாளர் நாயகமும் பாராளுமன்ற உறுப்பினருமான டக்ளஸ் தேவானந்தா உறுதியளித்துள்ளார்.

நேற்று முன்தினம் இந்து குருமார்களுடன்கொழும்பில் நடாத்திய சந்திப்பின் போது மேற்படி உறுதிப் பாட்டினை அவர் வழங்கியுள்ளார்.

பௌத்த சமய அலுவல்களுக்கென பௌத்த சாசன அமைச்சு இருப்பது போல, புதிய அமைச்சரவையில் இந்து சமய அலுவல்களுக்கென தனியான அமைச்சு உருவாக்கப்பட வேண்டும் எனும் கோரிக்கையை 20 பேர் கொண்ட இந்துமத குருமார் நேற்றுமுன்தினம்இடம்பெற்ற சந்திப்பின் போது முன்வைத்தனர்

அப்போது போரைநிறுத்தி சமாதானம் ஏற்படுத்துவது தொடர்பான கோரிக்கையும் மதகுருமாரால் முன்வைக்கப்பட்டது.

சுமார் இரு மணி நேரம் நடை பெற்ற இச் சந்திப்பில் இந்து மதம் தொடர்பாக பயனுள்ள விடயங்கள்பல பேசப்பட்டதாகவும் அவற்றுக்கு டக்ளஸ் எம். பி சாதகமான பதில்களை வழங்கியதாகவும் தெரியவந்துள்ளது.

(உ)

# யாழ். பிறந்த பல்கலைக்கழக சிறுவணிக முகாமைத்துவ கற்கை நெறியில் சித்தி பெற்றோர் விபரம்

(யாழ்ப்பாணம்)

1999 ஆம் கல்வியாண்டில் யாழ். பிராந்திய திறந்த பல்கலைக்கழகத்தால் நடாத்தப்பட்ட சிறு வணிக முகாமைத்துவ கற்கை நெறி பரீட்சைக்கு தோற்றிய 22 பேரில் 12 பேர் சித்தியடைந்துள்ளனர்.

அவர்கள் விபரம் வருமாறு, ரி. சுரேந்திரன், பி. தயாளன், கே. தர்மகுமார், பி. சத்தியசீலன், கே. ஜெயராஜசிங்கம், ஜே. சுந்தரலிங்கம், எஸ். அருணன், பி. மலர்மகள், கே. ராதிகா, கே. அம்பிகா, பி. தர்மிலி, ரி. சுபாஜினி

(உ)

# பாதாள உலகக் கும்பலை சேர்ந்தவர்களிடையே மோதல் நிலை ஒருவர் பலி; இருவர் காயம்

(கொழும்பு)

பாதாள உலக கும்பலை சேர்ந்தவர்களுக்குள் ஒரே தினத்தில் இடம்பெற்ற இரு வேறு மோதல் சம்பவங்களில் ஒருவர் பலியானார். இருவர் படுகாயங்களுடன் மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

நேற்று முன்தினம் இரவு 8.30 மணியளவில் பொரளைப் பகுதியில், பாதாள உலக கும்பலைச்சேர்ந்த இருசாரார் மோதிக் கொண்டதில் ஒருவர் அந்த இடத்திலேயே பலியானார்.

அதே இடத்தில் மீண்டும் இரவு 10 மணியளவில் இருசாராரும் துப்பாக்கிப்பிரயோகம் மேற்கொண்டதில் பாதாள உலகத்தை சேர்ந்த மற்றுமொருவர் படுகாயமடைந்துள்ளார். (உ)

# திருட்டுக்கள் பலவிதம் இதுவும் ஒருவிதம்

(நல்லூர்)

யாழ்ப்பாணப் பகுதியில் மிகவும் சாதுரியமான முறையில் திருட்டுக்கள் நடைபெற்று வருகின்றது.

அண்மையில் நல்லூர் பகுதியில் உள்ளவீடொன்றிற்குச் சென்ற திருட்டுநபர் ஒருவர் அவ்வீட்டுப் பெண்மணியிடம் நீண்ட தூரம் நடந்து வந்தமையால் மிகவும் களைப்படைந்துள்ளேன், தாகமாகவிருக்கிறது. குடிப்பதற்குத் தண்ணீர் தாருங்கள் எனக் கேட்டதனால், நீர் எடுப்பதற்காக வீட்டுப் பெண்மணி உள்ளே சென்றதும் வீட்டு மேஜையில் இருந்த கைப் பையுடன் திருட்டு நபர் மாயமாக மறைந்து விட்டார்.

திருடப்பட்ட அக்கைப்பையினுள் அடையாள அட்டைகள், ஒருதொகைப்பணம் ஆகியன இருந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.

சமீபகாலமாக இத்தகைய சாதுரியமான திருட்டுச்சம்பவங்கள் அதிகரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது(செ- 103)

# கட்டாக்காலி நாய்களால் தொல்லை பொதுமக்கள் புகார் தெரிவிப்பு

(நல்லூர்)

திருநெல்வேலி, கந்தர் மடம், குமாரசாமி வீதி, ஆத்திசூடி வீதி ஆகிய பகுதிகளில் கட்டாக்காலி நாய்களின் தொல்லை அதிகரித்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இப்பகுதிகளில்கட்டாக்காலி நாய்களின் தொல்லையால் பாடசாலைக்குச் செல்லும் சிறுவர், சிறுமியர் பெரும் அச்சத்துடன் செல்வதாகவும், சம்பந்தப்பட்டோர் இதற்குரிய நடவடிக்கையை எடுக்க வேண்டும் எனவும் பொது மக்களால் தெரிவிக்கப்படுகின்றது.

அண்மையில் கட்டாக்காலி நாய்களால் கடியுண்டோர் தொகை அதிகரித்து இருப்பது குறிப்பிடத்தக்கது.

(செ-103)

# மீன் வியாபாரிகளின் மோட். சைக்கிள் அபகரிப்பு

(ஏறாவூர்)

அம்பாறை 4ம் கொலனியில் இனந்தெரியாத ஆயுதபாணிகளினால் வழிமறிக்கப்பட்டு இரண்டு மேட்டார் சைக்கிள்கள் அபகரித்துக் கொண்டு செல்லப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் நடைபெற்ற இச் சம்பவத்தின் போது அந்த மீன்வியாபாரிகளிடம் இருந்து 3 ஆயிரம் ரூபா ரொக்கப்பணத்தையும் அபகரித்துச் சென்றுள்ளதாகவும் முறைப்பாட்டில் தெரிவிக்கப்படுகிறது. (வ)

# சமுர்த்தி நிவாரணம் பெறுவோருக்கு அதிகரித்த தொகை வழங்கப்படவில்லை

யாழ். மாவட்டத்தில்

(மந்திகை)

வறுமைக் கோட்டின் கீழ் வாழும் குடும்பங்களுக்கான சமுர்த்தி நிவாரணம் 250 ரூபாவினால் அதிகரிக்கப்பட்டுள்ளதாக சம்பந்தப்பட்ட திணைக்கள அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

நாடுமுழுவதும் அமுல்படுத்தப்பட்டுள்ள இத்திட்டம் தொடர்பான சுற்று நிருபம் அனைத்துச் செயலகங்களுக்கும் கூட்டுறவுச்சங்கங்களுக்கும் அனுப்பப்பட்டுள்ளதாகவும் அவ் அதிகாரிகளால் மேலும் தெரிவிக்கப்படுகின்றது.

இருந்த போதிலும் யாழ். மாவட்டத்தில் வாழும் சமுர்த்தி நிவாரணம் பெறுவோர்களுக்கு இவ் அதிகரித்த தொகை வழங்கப்படுவதற்கான எந்தவொரு நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லையெனவும் தெரிவிக்கப்படுகின்றது.

யாழ். குடா நாட்டில் தற்போதைய யுத்த சூழ்நிலையில் எத்தனையோ குடும்பங்கள் வேலை வாய்ப்பின்றி கஷ்ரப்படுகின்ற போதும், இவர்களுக்கு இச் சமுர்த்தி நிவாரணம் வழங்கப்படாமை குறித்து இவர்களால் கவலை தெரிவிக்கப்படுவதுடன், சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இதற்குரிய நடவடிக்கையை மேற் கொண்டு தமக்குரிய அதிகரிக்கப்பட்ட இச்சமுர்த்தி நிவாரணத்தைப் பெற்றுத் தர வேண்டும் எனவும் கோரிக்கை விடுத்துள்ளனர்.

(செ-23)

# கேதார கௌரி பூசை

நல்லூர்

வண்ணை ஸ்ரீ கடையிற் சுவாமிகள் சமாதி சிவாலயத்தில், கேதாரகேளரி நோன்பை முன்னிட்டு, ''சிவலிங்க பூசை, லட்சார்ச்சனை'' என்பன தினமும் சிறப்பாக நடைபெற்று வருகின்றன. (செ-103)

# நாகர் கோவில் முக்கிய திருவிழாவிற்கு அனுமதி மறுப்பு

(வடமராட்சி கிழக்கு)

வரலாற்றுப் பெருமை பெற்ற வடமராட்சிகிழக்கின் நாகர்கோவிலின் கப்பல் திருவிழா, மற்றும் தீர்த்தத்திருவிழா இரண்டிற்கும் சமுத்திரத்திற்குச் சென்று நீராடுவதற்கு படையினர் தரப்பில் அனுமதி மறுக்கப்பட்டுள்ளதாக விசனம்தெரிவிக்கப்பட்டுள்ளது.

வழமைபோன்று இம்முறையும் சமுத்திரத்தில் சென்று மேற்படி திருவிழாக்களை நடாத்துவதற்கு ஆலய அறங்காவலர்களிற்கு பாதுகாப்பை காரணம் காட்டி படையினர் அனுமதி வழங்கவில்லைஎனத் தெரிவிக்கப்படுகிறது.

இது குறித்துஇந்துசமயஅபிமானிகள் மத்தியில்அதிருப்தி நிலவுவதும் இங்கு குறிப்பிடத்தக்கது. (க-த-43)

# வடபகுதியிலுள்ள மூவாயிரம் கடற்றொழிலாளருக்கு நிவாரணம் வழங்க நடவடிக்கை

[யாழ்ப்பாணம்]

வட பகுதியிலுள்ள மூவா...

...பையிழந்து வாழும் கடற்றொழிலாளர்களிற்கே மேற்...

...பிரதேச செயலகங்களில் விஆரங்கள் திரட்டப்படுகின்றனா...

# தம்மை கைது செய்த பொலிஸாரை

அனுமதி மறுக்கப்பட்டுள்ளதாக விசனம்தெரிவிக்கப்பட்டுள்ளது.

தெரிவிக்கப்படுகிறது.

இது குறித்துஇந்துசமயஅபிமானிகள் மத்தியில்அதிருப்தி நிலவுவதும் இங்கு குறிப்பிடத்தக்கது. (க-த-43)

## தம்மை கைது செய்த பொலிஸாரை கத்தியால் குத்திய ரத்தோட்ட வாசி

(கொழும்பு)

தம்மைக் கைது செய்த பொலிஸாரைக் கத்தியால் குத்தினராம் ரத்தோட்டை வாசி ஒருவர்.

இச்சம்வம் பற்றி மேலும் தெரிவிக்கப்படுவதாவது; பல வழிகளிலும் துன்புறுத்தி வந்தவர் எனக்கருதப்படும் மேற்படி ரத்தோட்டை வாசியை பொலிஸார் ஒருவர் கைது செய்து கொண்டு சென்ற சமயம் தன்வசம் இருந்த கைக் கத்தியால் குத்திவிட்டு தப்பியோட முயன்றார் எனக் கூறப்படுகிறது.

கத்திக்குத்துக்கு இலக்கான பொலிஸார் மருத்துவமனையில் அனுமதிக்கப் பட்டுள்ளதாகவும், சந்தேகநபர் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டிருப்பதாகவும் தெரியவந்துள்ளது. (உ)

## புலிகளுடன் தொடர்புடைய நான்கு இளைஞர்கள் சரீரப் பிணையில் செல்ல அனுமதி

(யாழ்ப்பாணம்)

பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் புலிகளுடன் தொடர்புடையவர்கள் என சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டு யாழ் சிறைச்சாலையில் வைக்கப்பட்டிருந்தவர்களில் மேலும் நான்கு பேர் சரீரப் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

நடராசா ரஞ்சித்காந்தன் (ஆனந்தபுரம் கல்வியங்காடு)
சூசைப்பிள்ளைபாலேஸ்வரன் (டேவிட் வீதி குருநகர்)
தவரட்ணம் ஆனந்தராசா) (க்ட்டைபறிச்சான் வீதி கொடிகாமம்)
தங்கராசா ரதீபன் (கொக்குவில் மேற்கு)

ஆகிய நபர்களையே 25 ஆயிரம்ரூபா சரீரப்பிணையில் செல்ல யாழ் நீதிமன்றம் அனுமதித்ததுடன் அடுத்த மாதம் 20ஆம் 27ஆம் திகதிகளில் மன்றில் சமுகமளிக்குமாறும் உத்தரவிட்டுள்ளது. [க-12]

## நிவாரணப் வழங்க நடவடிக்கை

[யாழ்ப்பாணம்]

வட பகுதியிலுள்ள மூவாயிரம் கடற்றொழிலாளர்களுக்கு நிவாரணம் வழங்க கடற்றுறை அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

அண்மைக் கால யுத்த சூழ்நிலைகளால் தொழில்வாய்ப்பையிழந்து வாழும் கடற்றொழிலாளர்களிற்கே மேற்படி நிவாரணம் வழங்கப்படவுள்ளது.

இதன் முதல் கட்ட நடவடிக்கையாக 2000 குடும்பங்களிற்கு இந்நிவாரணம் வழங்கும் நடவடிக்கைகளிற்காக பிரதேச செயலகங்களில் விஆரங்கள் திரட்டப்படுகின்றனா

ஒரு குடும்பத்திற்கு நாள். ஒன்றுக்கு தலா 25 ரூபா வீதம் கிடைக்கும் வகையில் இந்நிவாரணம் வழங்கப்படுமெனக் கூறப்படுகிறது. (த)

## இந்துசமய அலுவல்களுக்கென தனியான அமைச்சு வேண்டும்

### ஜனாதிபதிக்கு மகஜர்

(யாழ்ப்பாணம்)

முன்னைய ஐ. தே. கட்சி அரசாங்கத்தில் இருந்தது போல இந்துசமய கலாசார அலுவல்களை கவனிக்க தனியான அமைச்சு வேண்டும்.

பூரண அதிகாரமற்ற நிலையில் இயங்கும் இந்து சமய கலாசார திணைக்களத்தை நீக்கிவிட்டு பிரதி அமைச்சு ஒன்றினை உருவாக்கி இந்து சமயகலாசார பிரதி அமைச்சர் ஒருவரை நியமனம்செய்யுமாறு சர்வதேச இந்துமத குருபீடத்தின் தலைவர் ஸ்ரீஐயப்பதாஸன் சாம்பசிவ சிவாச்சாரியார் ஜனாதிபதி திருமதி சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரதுங்கவிற்கு வேண்டுகோள் கடிதம் அனுப்பியுள்ளார். அந்த கடிதத்தில் மேலும் தெரிவிக்கையில்.

இதுவிடயமாக நாம் ஈழமக்கள் ஜனநாயக கட்சியின் பொதுச் செயலாளரும்யாழ். மாவட்ட பா. உறுப்பினருமான டக்ளஸ் தேவானந்தா அவர்களுடன் 15.10.2000 ஞாயிறு காலை இடம்பெற்ற கலந்துரையாடலின் போது எடுத்துக் கூறியுள்ளோம்.

அரசாங்கத்தை அமைக்கும் பொதுஜன ஐ. முன்னணி அரசிற்கு பூரண ஆதரவு வழங்கும் கட்சியான ஈ.பி.டி.பி. இந்த கோரிக்கைகளை முன்வைக்க வேண்டுமென நாம் கேட்டுள்ளோம்.

எமது கோரிக்கைளுக்கு பதிலளித்த டக்ளஸ் தேவானந்தா எம்.பி, ‘வடமாகாண அபிவிருத்தி இந்துசமய கலாசார தமிழ் அலுவல்கள் அமைச்சுஒன்றினைஉருவாக்க தான் பூரணசம்மதம் கொண்டுள்ளதாக எமக்கு உறுதியளித்தார்.

எனவே ஜனாதிபதியாகிய தாங்கள் தமிழ்மக்களின், குறிப்பாக இந்து சமயத்தவரின் நியாயமான கோரிக்கையை ஏற்று. வடமாகாண அபிவிருத்தி, இந்துசமய கலாசார அமைச்சு ஒன்றினை உருவாக்கி வடமாகாண அபிவிருத்திக்கு ஒரு அமைச்சரையும், இந்துசமய அலுவல்களுக்கு பிரதி அமைச்சர் ஒருவரையும் நியமிக்கவும். (க)

★ தமிழ் உலகில் அருகிக் கொண்டிருக்கும்

# நாட்டுக்கூத்துக்கு புத்துயிரளித்தவர்

# அமரர் பேராசிரியர் சு. வித்தியானந்தன்

## துணைவேந்தர் தெரிவிப்பு

(தென்மராட்சி)

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் துணைவேந்தராக இருந்த பேராசிரியர் சு. வித்தியானந்தனின் பணிகள் நாடு தழுவிய ரீதியில் புகழ்பெற்றவை. அவர் கல்விப் பணி, தமிழ்ப்பணி, சமூகசேவை, அரசியல் மற்றும் யாழ்ப்பாணப் பல்கலைக் கழகச்சேவையில் தன்னை முழுமையாக அர்ப்பணித்துச் செயல்பட்ட பெருந்தகையாளர். தமிழ்உலகில் மறைந்துபோய்க் கொண்டிருந்த நாட்டுக் கூத்துக்கு புத்துயிர் அளித்தவர் போரசிரியர் வித்தியானந்தன். அனைத்து இன மக்கள் மத்தியிலும் நீங்காத இடத்தைப் பெற்றுக் கொண்டவர்.

இவ்வாறுயாழ்ப்பாணப்பல்கலைக் கழகத்தின் கைலாசபதி கலையரங்கில் பல்கலைக் கழகத்தினால் நடத்தப்பட்ட பேராசிரியர் சு. வித்தியானந்தன் நினைவுப் பேருரை நிகழ்வுக்குத் தலைமை வகித்து உரையாற்றிய துணைவேந்தர் பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை கூறினார்.

அவர் மேலும் தமது தலைமையுரையில் குறிப்பிடும் போது.

பேராசிரியர் வித்தியானந்தன் ஆற்றிய பணிகளில்இலங்கைத் தமிழ் மக்களுக்கு ஆற்றிய சேவை, இலங்கைப் பல்கலைக்கழகத்துக்கும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்துக்கும் ஆற்றிய பெரும் சேவைகள் ஈண்டு குறிப்பிடத் தக்கவைகளாகும்.

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம் 1979 ல் பூரணத்துவமிக்க பல்கலைக் கழகமாக ஆக்கப்பட்டது முதல் 1988ம் ஆண்டு வரை துணைவேந்தராகப்பணியாற்றிப் பலஅரும் பெரும் சேவைகளை ஆற்றியுள்ளமை யாவரும் அறிந்ததாகும்.

1974 ம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் நடத்தப்பட்ட வரலாற்று முக்கியத்துவம் பெற்ற 4 வது அனைத்துலக தமிழாராய்ச்சி மாநாட்டில் வித்தியின் ஈடுபாடும், சேவையும் உயர்ந்ததாகக் கருதப்பட்டது. இன்று எமது பல்கலைக் கழகத்திலும், மருத்துவ பீடத்திலும்உயர்ந்து நிற்கும் கட்டடத் தொகுதிகள், நூலகம், விஞ்ஞான ஆய்வு கூடம் போன்றவை அவரது முயற்சியினால் உருவானவையாகும் எனக் குறிப்பிட்டார்.

பேராசிரியர்சுப்பிரமணியம் வித்தியானந்தன் நினைவுப் பேருரையை யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் வரலாற்றுத் துறைத் தலைவர் பேராசிரியர் சி. க. சிற்றம்பலம் பண்டைய ஈழத்தில் தமிழர் – ஒரு பன்முகப் பார்வை எனும் தலைப்பில் உரை நிகழ்த்தினார்.

அவர்தமதுஉரையின்போது ஈழத்தின் பூர்வீக குடிகள் கற்கால மக்களாகிய ஒஸ்ரிக் மொழியைப் பேசிய மக்களாகும். இவர்களைத்தொடர்ந்து கி·மு 1000ஆண்டளவில்ஈழத்தின் நாகரிக கர்த்தாக்களாகிய தற்கால தமிழ், சிங்கள மொழியைப் பேசுவோரின் கலாசாரமாகிய, பெருங்கற்கால கலாசாரப் தென்னிந்தியாவில் இருந்து ஈழத்துக்குப் பரவியது.

திராவிட மொழிகளாகிய தமிழ், எலு ஆகியன இக்காலத்தில் இவர்களால் அறிமுகப்படுத்தப்பட்டன. பௌத்தத்துடன் வந்த பிராகிருதமொழிச் செல்வாக்கால் எலு, வட இத்திய மொழிச் சாயலை பெற்றுச் சிங்கள மொழியாக வளர்ந்து வட இந்தியக் குடியேற்றம் பற்றிய ஐதீகம் உருவாகியது. இத்தகைய ஐதீகம் பாரதூரமான தாக்கத்தினை ஏற்படுத்தியுள்ளது என்றார்.

பல்கலைக் கழகத்தின் உயர் பட்டப் படிப்பின் பீடாதிபதி பேராசிரியர் அ. சண்முகதாஸ்நன்றியுரைவழங்கினார்.

## இடம்பெயர்ந்த குடும்பங்களுக்கு 338 தனிக்குடிசைகள் அமைப்பு

(தென்மராட்சி)

யாழ். மாவட்ட மனித முன்னேற்ற நடுநிலையம் இடம்பெயர்ந்த குடும்பங்களுக்கு ஆனைக்கோட்டை, மானிப்பாய், பருத்தித்துறை, கரவெட்டி, வட்டுக்கோட்டை ஆகிய இடங்களில் இதுவரை 338 தனிக்குடிசைகளை அமைத்துள்ளது.

அதேபோல சுண்டுக்குளி புனித பத்திரிசியார் கல்லூரி,

தார்.

அவர் தமது பணிகள் பற்றி மேலும் குறிப்பிடுகையில்; போஷாக்கு குறைவாகவுள்ள சுமார் 1200 பிள்ளைகளுக்கு சத்துணவு வழங்கப்பட்டதுடன், அராலி, வட்டுக்கோட்டை முகாம்களிலுள்ள 62 குடும்பங்களுக்கும் முகாம்களுக்கு வெளியேயுள்ள 52 குடும்பங்களுக்கும் ஆடி, ஆவணி, புரட்டாதி மாதங்களில் நிவாரண உதவிகளும்

★ தேர்தல் மோசடிகளுக்குத்

## தடையாய் இருந்த பெண் பொலிஸ் மயக்கமடையும்வரை தாக்கப்பட்டார்

### நீர்கொழும்பில் சம்பவம்

(கொழும்பு)

தேர்தல் மோசடிகள் புரிவதற்குத் தடையாய் இருந்த பெண்பொலிஸ் உத்தியோகத்தர் மற்றும் இரு விமானப் படையினர் ஆகியோர் கைக்கூலிகளின் தாக்குதலுக்கு இலக்காகிய நிலையில் இராணுவ வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருப்பதாய் தெரிய வந்துள்ளது.

இத்தாக்குதல்களின் பின்னணியில் இரு பிரபல அரசியல் வாதிகள் சம்பந்தப்பட்டிருப்பதாக நம்பப்படுகிறது.

தேர்தல் தினத்தன்று நீர்கொழும்பு, அமுனுகம பகுதி வாக்களிப்பு நிலையத்தில் கடமையில் இருந்த பெண் பொலிஸ் உத்தியோகத்தரை மயக்கமடையும்வரை மேற்படி அடியாட்கள் தாக்கியதாகவும் கவலைக்கிடமான வகையில் அவர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டதாகவும் தெரியவந்துள்ளது.

மற்றைய இரு விமானப் படையினரும் வாக்களிப்பு நிலையத்தில் அத்துமீறிப் புகுந்தோரை தடுத்து நிறுத்தியவேளை தாக்கப்பட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.

(உ)

## கட்டாக்காலி காளை அட்டகாசம் பொதுமக்கள் பெரும் அச்சம்

(ஈச்சமோட்டை)

வட்டுக்கோட்டைப் பகுதியில் உலாவும் கட்டாக்காலிக் காளை ஒன்று பெரும் அட்டகாசம் புரிந்து வருகின்றது.

இக் கட்டாக்காலி காளை பயிர்விளை நிலங்களினுள் புகுந்து பயிருக்கு பெரும் சேதத்தை விளைவிப்பதுடன் வேறு மாடுகளையும் கடுமையாகத் தாக்கிவருகின்றது.

வீதியால் செல்லும் வண்டில் காளைகளையும் கடுமையாகத் தாக்கியதில், தாக்கப்பட்ட காளைகளுக்கு தையல் போடவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

பார்ப்பதற்கு பயங்கரத் தோற்றமுடைய இக் காளையை பிடிப்பதற்கு ஊரவர்கள் முயற்சி செய்த போதிலும் அக் காளை எல்லோரையும் ஏமாற்றி வருகின்றது. பொதுமக்கள் அச்சத்துடனேயே உலவி வருகின்றனர்.

(செ–59)

★ தேர்தலுக்குப் பின்

## நடைபெற்ற வன்முறைச் சம்பவங்களில் 115பேர் படுகாயமடைந்தனர்

(கொழும்பு)

தேர்தல் தினத்தன்றில் இருந்து இதுவரை இடம்

வங்களினால் இவர்கள் காயமடைந்திருப்பதாகவும், தாக்குதலுக்காகப் பயன்படுத்தப்பட்ட 20 வாகனங்கள் கைப்

## செயற்திட்டங்கள் நடைமுறை

(கொழும்பு)

பொறளையில் தாபிக்கப் பட்டுள்ள வர்த்தக ஏற்றுமதி நிலையத்தில் 60 செயற்திட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளன.

இதனால் 20 ஆயிரம் பேர் வேலை வாய்ப்பை பெறமுடியுமென கூறப்படுகிறது.

இறப்பர், இராசாயனப் பொருட்கள், விவசாய உற்பத்திப் பொருட்கள், கனிய உற்பத்திப் பொருட்கள், முதலான திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

(க-த)

## அதிபர்கள் கூட்டம்

(கோப்பாய்)

கோப்பாய்க் கோட்டப் பாடசாலைகளின் அதிபர்கட்கான கூட்டம் எதிர்வரும் வெள்ளிக்கிழமை காலை 10.00 மணியளவில் கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரியில் நடைபெறும்என கோப்பாய்க் கோட்டக் கல்விப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

(க-79)

## விண்ணப்பங்கள் கோரப்படுகிறது

(நல்லூர்)

'2001-ஆம் ஆண்டு நடைபெறவுள்ள சங்கீதப் பரீட்சைக்கான விண்ணப்பங்கள் வட இலங்கைச் சங்கீத சபையினால் கோரப்பட்டுள்ளது. இதற்கான விண்ணப்பங்கள் 10–12–2000 ஆம் திகதிக்குள் அனுப்பிவைக்கப்பட வேண்டும் என வட இலங்கைச் சங்கீத சபையினர் தெரிவித்துள்ளனர்.

(செ–103)

## மிதிவெடியில் உயிரிழப்பு

(ஈச்சமோட்டை)

அண்மைக்கால யுத்த நடவடிக்கையின் போது படையினரால் விடுவிக்கப்பட்ட அரியாலைப் பகுதிக்கு தமது வீட்டைப் பார்வையிடச் சென்ற நபர் மிதிவெடியில் சிக்குண்டு பரிதாபகரமாக உயிரிழந்துள்ளார்.

நேற்று செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற இச்சம்பவத்தில் சின்ரனாசா(வயது 65) என்பவரே மேற்படி உயிரிழந்தவராவார்.

(செ-03-59)

## பரிசளிப்பு விழா

[இணுவில்]

இணுவில் இந்துக்கல்லூரியில் பரிசளிப்பு விழா இன்று புதன்கிழமை மு. ப. 10. 00 மணிக்கு நடைபெறவுள்ளது.

பாடசாலை முதல்வர் க. கனகராரசா தலைமையில் நடைபெறும் இந்நிகழ்விற்கு

ஆகிய இடங்களில் இதுவரை 338 தனிக்குடிசைகளை அமைத்துள்ளது.

அதேபோல சுண்டுக்குளி புனித பத்திரிசியார் கல்லூரி, புனித சூசையப்பர் கல்லூரி, புனித அந்தோனியார் கல்லூரி ஆகிய வற்றில் மொத்தமாக ஆறு பொதுக் குடிசைகளை மாணவர்களுக்காக அமைக்கப்பட்டுள்ளதாக கியூடெக் நிறுவனத்தின் பணிப்பாளரான அருட்பிதா சி.ஜீ. ஜெயக்குமார் தெரிவித் கோட்டை முகாம்களிலுள்ள 62 குடும்பங்களுக்கும் முகாம்களுக்கு வெளியேயுள்ள 52 குடும்பங்களுக்கும் ஆடி, ஆவணி, புரட்டாதி மாதங்களில் நிவாரண உதவிகளும் வழங்கப்பட்டதாகவும் ஆனைக்கோட்டை, மானிப்பாய், புனித பத்திரிசியார் கல்லூரி ஆகிய இடங்களில் மொத்தம் 10 மலசல கூடங்கள் நிர்மாணிக்கப்பட்டதாகவும் அவர் குறிப்பிட்டார்.

(க-77)

# 115பேர் படுகாயமடைந்தனர்

(கொழும்பு)

தேர்தல் தினத்தன்றில் இருந்து இதுவரை இடம் பெற்ற வன்செயல் சம்பவங்களில் நாடுமுழுவதும் 115 பேர் காயமடைந்தநிலையில் மருத்துவமனைகளில் அனுமதிக்கப்பட்டிருப்பதாக மருத்துவமனை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

அவ்வட்டாரங்கள் மேலும் தெரிவிக்கையில் கொழும்பு அநுராதபுர மருத்துவமனைகளில் இவர்கள் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

துப்பாக்கிச்சூடு, குண்டுத் தாக்குதல் போன்ற சம்ப வங்களினால் இவர்கள் காயமடைந்திருப்பதாகவும், தாக்குதலுக்காகப் பயன்படுத்தப்பட்ட 20 வாகனங்கள் கைப்பற்றப்பட்டிருப்பதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, இந்த வன்முறைச் சம்பவங்களில் பெரும்பாலானவை கண்டிமாவட்டத்தில்இடம்பெற்றிருப்பதாகவும்இவை தொடர்பாகஇது வரை 25ʼ சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டிருப்பதாகவும் பொலிஸ் தலைமையகம் விடுத்துள்ள செய்திக் குறிப்பில் குறிப்பி ப்பட்டுள்ளது.

(உ)

இணுவில் இந்துக்கல்லூரியில் பரிசளிப்பு விழா இன்று புதன்கிழமை மு.ப.10.00 மணிக்கு நடைபெறவுள்ளது.

பாடசாலை முதல்வர் க. கனகராரசா தலைமையில் நடைபெறும் இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக வி. இராசையா கலந்து கொள்கிறார். [செ[6ʼ-

## மண்ணெண்ணெய் விநியோகம்

(மந்திகை)

கட்டைவேலி நெல்லியடி பலநோக்குக் கூட்டுறவுச்சங்க எல்லைக்குட்பட்ட விவசாயிகளுக்கு மண்ணெண்ணெய் வழங்கப்பட்டு வருகிறது.

(உ.23)

## நெல்லியடிப் பகுதியில,
# வீதி ஒழுங்கு நடவடிக்கை இல்லை விபத்துக்கள் ஏற்படலாம் என அச்சம்

(மந்திகை)

நெல்லியடிச் சந்திப்பகுதியில் விபத்துக்கள் ஏற்படும் அபாய நிலை தோன்றியிருப்பதாக பொதுமக்கள் தரப்பில் அச்சம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இடம்பெயர்ந்த பலர் இப்பகுதியை அண்டி வசிப்பதால், பொதுமக்களின் நடமாட்டம் அங்கு வெகுவாக அதிகரித்துள்ளது.

தீபாவளிப் பண்டிகை நெருங்குவதனால் அங்கு அமைந்துள்ள உடுபுடவை விற்பனை நிலையங்களுக்கு பெருமளவு பொதுமக்கள் படையெடுக்கின்றனர்.

அத்துடன், அங்கு வீதி ஒழுங்குகள் குறித்து நடவடிக்கை எதுவும் மேற்கொள்ளப்படாததுடன், பொதுமக்களின் துவிச்சக்கர வண்டிகள் மற்றும் போக்குவரத்துச்சாதனங்களை நிறுத்த ஏற்றஇடம் ஒழுங்கு செய்யப்படவில்லை.

இதனால் கண்ட கண்ட இடத்திலும் வீதிக்கு மிக அண்மையாகவும் துவிச்சக்கரவண்டிகளை நிறுத்த வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

இது விடயம் தொடர்பாக பொதுமக்கள் தரப்பில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளதுடன், ஏற்ற நடவடிக்கை எடுக்க சம்பந்தப்பட்ட அதிகாரிகள் முன்வர வேண்டும் எனவும் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

(க-உ)

# தே.ஐ.முன்னணிக்கு அடிபணிவதை விட எதிர்க்கட்சியில் இணையலாம்

## பொ. ஐ. மு பிரமுகர்கள் குமுறல்

(கொழும்பு)

தேசிய ஐக்கிய முன்னணிக்கு அடிபணிவதை விட எதிர்கட்சி ஆசனத்தில் அமரலாம்.

ஆட்சியமைப்பதற்காக, தேசிய ஐக்கிய முன்னணியின் உதவியை நாடியிருக்கும் பொதுஜன ஐக்கிய முன்னணி அரசு, அதற்காய் பல விட்டுக் கொடுப்புக்களை செய்ய முன் வந்திருப்பது குறித்து பொதுஜன ஐக்கிய முன்னணிப் பிரமுகர்கள் இவ்வாறு தமது அதிருப்தியினைத் தெரிவித்துள்ளனர்.

தேசிய ஐக்கிய முன்னணியின் கோரிக்கைகள் பல ஏற்புடையனவல்லவெனவும், அவற்றினை ஏற்று ஆட்சியமைப்பது பொதுஜன ஐக்கிய முன்னணியை விற்பதற்கு ஒப்பானது எனவும் அவர்கள் தெரிவித்திருப்பதாகவும் தென்னிலங்கை அரசியல் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இதேசமயம், சிறுபான்மைக் கட்சிகளை இணைத்துஆட்சியமைப்பது தொடர்பாகவும், அதற்காக அக் கட்சிகளின் கோரிக்கைகளை ஏற்பது தொடர்பாகவும் பொதுஜன ஐக்கிய முன்னணிக்குள்ளே பூசல்கள் எழுந்திருப்பதும் குறிப்பிடத்தக்கது.

(உ)

### இன்று ஒரு தகவல்

## மாண்புமிகு பிறவி மானிடப் பிறவியே

குருசாமி கோமதியை மணந்து கொண்டு ஊருக்கு வந்தான். குருசாமி சாதாரணப்பட்ட குடும்பத்தில் பிறந்தவன். கோமதி அவனை விடச் சற்று வசதியான குடும்பத்தில் பிறந்தவர். குருசாமி குடித்தனம் செய்துகொண்டிருக்கும்போது கோமதி அக்கம் பக்கத்துப் பணக்கார வீட்டுப் பெண்களைப் பார்த்துவிட்டு அவர்களுக்கு இருப்பது போலவே தனக்கும் சரிகைப் பட்டுப் புடவைகளும், தங்க நகைகளும் வேண்டும் என்று நச்சரிக்கலானாள்.

ஒரு ஜமீந்தாரிடம் சாதாரண குமஸ்தாவாக வேலை பார்க்கும் குருசாமி இதற்கெல்லாம் எங்கே போவான்? மனைவியின் நச்சரிப்பு அவனைக் கவலையில் ஆழ்த்தியது. அதனால் அவனால் தன் வேலையில் கவனம் செலுத்த முடியவில்லை. அதனால் ஜமீந்தார் அவனை வேலையிலிருந்து நீக்கிவிட்டார்.

வேலையையிழந்த குருசாமி என்ன செய்வதென்று திகைத்துப் போனான். அப்போது அவ்வூருக்கு நித்தியானந்தர் என்ற யோகி வரவே, அவரை கண்டு தன் மனைவியால் தனக்கு எற்படும் பிரச்சினைகளைக் கூறினான்.

யோகியும் ''சரி, நீ என்ன விரும்புகிறாய்?'' என்றுகேட்க வேனும்' 'சுவாமி! இந்த மானிடப் பிறவியை விட்டு வேறு ஏதாவது பிறவி எடுத்தால் சுகப்படலாம் என்று நினைக்கிறேன்'' என்றான். யோகியும் ''சரி, நீ என்ன பிறவி எடுத்தால் சுகப்படுவாயென்று சொல். அதுவரை நீ நினைக்கும் பிறவியிலுள்ள நன்மை தீமைகளை எல்லாம் உன் கண்முன் தோன்றச்செய்கிறேன்'' என்றார்.

குருசாமியும் அப்படியே செய்வதாகக் கூறிவிட்டுச் சுற்றிலும் பார்த்தான். அப்போது அவனெதிரே இருந்த பவளமல்லி மரம் காற்றில் அசைந்து மலர்களை உதிர்த்தது, அதிலிருந்து நறுமணம் வீசவே அவன் அந்த மலராக ஆகிவிடலாமா என்று நினைத்தான். அவன் கண்ணை மூடிக் கொண்டு அதன் நன்மை, தீமைகளைப் பற்றி நினைத்தான். மலர் மாலையாகிச் சற்று நேரத்தில் வாடி வதங்குவதைக் கண்டு அவன் அம்மாதிரி மலராகும் எண்ணத்தைக் கைவிட்டு விட்டுச் சுற்றிலும் பார்த்தான்.

ஒரு மரத்தின் மீதுஒரு புறாவைக் கண்டு அவன் தானும் அது போலாகிவிடலாமா என நினைத்து. கண்களை மூடிக் கொண்டான். ஆகாயத்தில் பறக்கும் அதனை நோக்கி சிலர் அம்பு எய்வது கண்டு அந்தஎண்ணத்தையும்கைவிட்டான்.

சற்றுத் தூரத்தில் ஒரு ஆடு துள்ளி ஓடுவது கண்டு அவன் அதுபோல் ஆகிவிடலாமாஎன நினைத்து அதன் நன்மை தீமைகளைக் காணக் கண்களை மூடிக் கொண்டான். அழகான அந்த ஆட்டை ஒரு கசாப்புக்கடைக்காரன் இழுத்துக் கொண்டு போய்த் தன் கையிலிருந்த கொடுவாளால் வெட்டுவதைக் கண்டான்.

இக் காட்சிகளை எல்லாம் கண்ட அவன் யோகியிடம் ''எந்தப் பிறவியிலும் கஷ்டம் இருக்கத்தான் செய்கிறது. நான் மனிதனாகவே இருந்து விட்டுப் போகிறேன். என் மனைவி கடுஞ்சொற்களைத் தானே கூறுகிறாள் அதனைச் சகித்துக் கொண்டு பேசாமல் இருந்து விடுகிறேன்'' என்றான். யோகியும் ''பேஷ்! நீ மனிதனாகவே இருந்து கஷ்டங்களைச் சமாளிப்பதாகக் கூறியதைப்பாராட்டுகிறேன். நீ உன் மனைவியின் போக்கையும் மாற்ற முயற்சி செய். கண்டிப்பாக அவள் திருந்தி உன் வழிக்கு வருவாள். அதனால் உன் குடும்ப வாழ்க்கையும் சுகமாக அமையும்'' என ஆசிகள் கூறினார்.

குருசாமியும் மனத் தெளிவு பெற்றவனாய் மன நிறைவுடன் தன் வீட்டிற்குத் திரும்பி வந்தான்.

உண்மையும் அதுவே மனிதன் தான் சிரிக்கவும், சிந்திக்கவும், அழவும், பேசவும் கூடிய அதி விசேட தன்மை வாய்ந்தவன் ஆகையால் தனக்கு வரும் இடர்களையும் சமயோகிதமாக நீக்கி மாண்புடன் வாழப் பழக வேண்டும். அதனால். அரிதானமானிடப்பிறபி மாண்பு பெறும்.

நன்றி
பாப்பா முரசு

# மணற்காட்டுப் பகுதியில் கடற்றொழில் புரியும் நேரம் நீடிப்பு

(வடமராட்சி கிழக்கு)

வடமராட்சி கிழக்கு மணற்காட்டுப் பகுதியில் அதிகாலை 4.30மணி தொடக்கம் பி.ப 3.30 மணிவரை 4கிலோ மீற்றர் தூரத்திற்கு கடற்றொழிலில் ஈடுபடுவதற்கு படையினர் அனுமதி வழங்கியுள்ளனர்.

இது விடயம் தொடர்பான கலந்துரையாடல் ஒன்றுவடமராட்சி கிழக்கு கடற்றொழிலாளர் சங்கப் பிரதி நிதிகளுக்கும் இராணுவ மற்றும் கடற்படையினருக்கும் இடையே இடம்பெற்றதையடுத்தே மேற்படி முடிவு எடுக்கப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

இதே வேளையில் வடமராட்சி கிழக்கின் ஏனைய பகுதிகளில் அதிகாலை 5.00 மணிமுதல் மு.ப10 மணி வரை கடற்றொழில் செய்வதற்கு அனுமதி வழங்கப்பட்டது ஏற்கனவே தெழுந்ததே.

வடமராட்சிப் பகுதியில் கடற்றொழில் செய்வதற்கு அனுமதி வழங்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்து கடந்த மாதம் உண்ணாவிரதப் போராட்டம் இடம்பெற்றதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

(க-த-43)

## சிறுவர் முதியோர் தினவிழா

(மந்திகை)

கட்டைவேலி நெல்லியடி பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தில் சிறுவர் முதியோர் தின நிகழ்வுகள் நடைபெற்றது.

சங்கத் தலைவர் த. சிதம்பரப்பிள்ளை தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் கலந்து கொண்ட சிறுவர்கள் முதியோர்களுக்கான பரிசில்களையும், முதியோர்கள் சிறுவர்களுக்கான பரிசில்களையும் வழங்கிக் கௌரவித்தனர். (செ-23)

## வடமராட்சி கிழககிலிருந்து இடம்பெயர்ந்த மக்களுக்கு விரைவில் நிவாரணப் பணம்

[வடமராட்சி கிழக்கு]

யுத்த அனர்த்தங்களால் வடமராட்சி கிழக்கிலிருந்து இடம் பெயர்ந்த கடற்றொழிலாளருக்கான நிவாரணப் பணம் விரைவில் வழங்கப்பட உள்ளதாக மருதங்கேணி பிரதேச செயலக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இதுதொடர்பானமுன்னேற்பாட்டு நடவடிக்கைகள் யாவும் முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் மேலும் அவ்வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இதே வேளை மருதங்கேணி பிரதேச செயலகம் தற்போது வடமராட்சிப் பகுதியில் தற்காலிகமாக இயங்கி வருவதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

(க-43)

## புதிய கற்கை நெறிகள் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

ஸ்ரீலங்கா உயர்தொழில் நுட்பக் கல்வி நிறுவனத்தினால் நடத்தப்படும் உயர் தேசிய டிப்ளோமா (கணக்கியல்), தேசிய டிப்ளோமா ஆங்கிலம்) கற்கை நெறிகளுக்கு விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது.

1999 ஆம் ஆண்டு அல்லது அதற்கு முன்னைய ஆண்டுகளில் கல்விப் பொதுத்தராதர உயர்தர பரீட்சையில் சித்தியடைந்தவர்கள் மேற்படி கற்கை நெறிகளுக்கு விண்ணப்பிக்க முடியும்.

விண்ணப்பப்படிவம் மற்றும் மேலதிக விபரங்களுக்கு யாழ். உயர் தொழில்நுட்பக் கல்வி நிறுவனத்துடன் தொடர்பு கொள்ளலாம் எனவும் தெரிவிக்கப் பட்டுள்ளது.

விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளும் இறுதித்தினம் அடுத்த மாதம் 7 ஆம் திகதி என்றும் தெரிவிக்கப் பட்டுள்ளது. (க-உ)

## க. பொ. த. (சாதாரண) தரம அடுத்த மாதம் முன்னோடி பரீட்சை

(யாழ்ப்பாணம்)

க.பொ.த.சாதாரண முன்னோடிப் பரீட்சையினை யாழ். றோட்றிக் கழகத்தினர் நடத்தவுள்ளனர்.

மேற்படி முன்னோடிப் பரீட்சையில், கணிதம், விஞ்ஞானம், தமிழ்மொழி இலக்கியம், ஆங்கிலம், வரலாறு சமூகக்கல்வி ஆகிய பாடங்களுக்கான பரீட்சைகள் நடைபெறும்.

மாவட்ட மட்டத்தில் இம் மாதம்27 ஆம் திகதி ஆரம்பமாகும் இப்பரீட்சைகள் 30 பரீட்சை நிலையங்களில் இடம்பெறவுள்ளன.

அதிகூடிய புள்ளிகளை பரீட்சையின் போது பெறுவோருக்கு பரிசிலகளையும், சித்தியடைவோருக்கு சான்றிதழ்களும் வழங்கப்படவுள்ளன.

பாடசாலைகளிலுள்ள றோட்றிக்கழகங்களின் தலைவர்கள் மூலம் விண்ணப்பங்களை குறிப்பிட்ட மாணவர்கள் விரைவில் அனுப்பிவைக்குமாறு றோட்றிக்கழக செயல் திட்ட இயக்குநர் தெரிவித்துள்ளார். (க–ந)

## மின்சார உபகரணங்கள் திருட்டு விளக்க மறியலில இருவா

(யாழ்ப்பாணம்)

இரவு வேளை கடை ஒன்றில் இருந்து பெறுமதி வாய்ந்த மின்சார உபகரணங்களை திருடினார்கள் என்ற சந்தேகத்தின் பேரில் இருவர் விளக்கமறியலில்வைக்கப்பட்டுள்ளனர்.

சண்டிலிப்பாய் பகுதியில் உள்ள தேநீர் கடை ஒன்றிலிருந்து பெறுமதி வாய்ந்த மின்சாரப் பொருட்கள் திருடப்பட்டது சம்பந்தமாகவே இருவரும் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்

சங்குவேலியை சேர்ந்தவர்களான விஜயசுந்தரம் சுதாகரன், [கிருபா] சிங்கராஜா சசிகுமார் (சசி) ஆகியோரே இம் மாதம் 27ம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப் பட்டவர்களாவர். (க-12)

## கட்சி அலுவலகங்களை நோக்கி

## பெறுபேறுகள்

தீமைகளைப் பற்றி நினைத்தான். மலர் மாலையாகிச் சற்று நேரத்தில் வாடி வதங்கு

பாப்பா முரசு

அடுத்த மாதம் 7 ஆம் திகதி என்றும் தெரிவிக்கப் பட்டுள்ளது. (க-உ)

என்ற சந்தேகத்தின் பேரில் இருவர் விளக்கமறியலில்வைக்கப்பட்டுள்ளனர்.

சண்டிலிப்பாய் பகுதியில் உள்ள தேநீர் கடை ஒன்றிலிருந்து பெறுமதி வாய்ந்த

சங்குவேலியை சேர்ந்தவர்களான விஜயசுந்தரம் சுதாகரன், [கிருபா] சிங்கராஜா சசிகுமார் (சசி) ஆகியோரே இம் மாதம் 27ம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப் பட்டவர்களாவர். (க-12)

## கட்சி அலுவலகங்களை நோக்கி படையெடுக்கும் வாக்காளர்

(யாழ்ப்பாணம்)

தேர்தல் முடிந்தும் கூட யாழ்ப்பாண வாக்காளர்கள் பலர் தமிழ்க்கட்சி அலுவலகங்களை நோக்கி படையெடுத்து வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

தோல்வியடைந்த கட்சி அலுவலகங்களுக்கும் கூட இவர்கள் சென்று நாங்கள் உங்களுக்கே வாக்குப்போட்டோம், எனவே நிவாரணத்தை தொடர்ந்து தர வேண்டும் என்றும் வற்புறுத்துகிறார்களாம்.

மேற்படி கட்சியினரிடமிருந்து அரிசி, மா, சீனி, மற்றும் பணம் போன்றவற்றையும் இவ் வாக்காளர் பெற்று வந்ததும் இங்கு குறிப்பிடத்தக்கது. (க-03)

## பெறுபேறுகள் அனுப்பிவைப்பு

(நல்லூர்)

வட இலங்கைச் சங்கீத சபையினரால் இவ் ஆண்டு நடத்தப்பெற்ற சங்கீதப்பரீட்சைகளின் பெறுபேறுகள் பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களுக்குத் தபால் மூலம் அனுப்பிவைக்கப் பெற்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. [செ-103]

## இலங்கை உதைபந்தாட்ட அணி மலேசியா புறப்படவுள்ளது

(கொழும்பு)

இலங்கை தேசிய கால் பந்தாட்ட அணி இரு நாடுகளுடன் சிநேகபூர்வ போட்டிகளில் கலந்து கொள்ளும் முகமாக இம்மாதம் 22ஆம் திகதி மலேசியா புறப்படவுள்ளது.

24ஆம் திகதி மலேசியா தேசிய அணியுடனும், 26ஆம் திகதி இரண்டாவது தேசிய அணியுடனும் இலங்கைஅணி மோதவுள்ளது.

சிங்கப்பூரிலும் 2போட்டிகளில் கலந்து கொள்ளவுள்ள இவ்வணியின்வீரர்கள் பெயர்கள் தெரிவாகியுள்ளன.

ஆயினும்தற்போது அமைச்சர் அங்கீகாரத்தை பெறுவதில் இவ்வணியினர் ஈடுபட்டு வருகின்றனர். (த)

# நேர்மையான தேர்தல் வெற்றியை தற்போது காணமுடியாதுள்ளது

### பிரமுகர் அர்ஜுன் பராக்கிரம தெரிவிப்பு

(கொழும்பு)

தற்போது கிடைத்துள்ளது நேர்மையான தேர்தல் வெற்றியல்ல. வன்முறைகள் நிறைந்த ஒரு தேர்தலில் கிட்டிய வெற்றியை, எவ்வாறு உண்மையான வெற்றிஎனக் கொள்ள முடியும். என தேர்தல் அவதான நிலையத்தின் பணிப்பாளர் அர்ஜுன்பரக்கிரம கேள்வியெழுப்பியுள்ளார்.

வைடக்குக் கிழக்கிலும் நேர்மயான தேர்தல் நடைபெறவில்லை அதுவெறும் கேலிக்கூத்து நிகழ்வாய் முடிந்துள்ளது.

இடம் பெயர்ந்தவர்கள் வாக்களிக்க சரியான ஏற்பாடு செய்யப்படவில்லை தேர்தல் தினத்தன்றும் குண்டுத்தாக்குதல்கள் இடம்பெற்றுள்ளது.

இதனால் அதிகமான மக்கள் வாக்களிக்கச் செல்லவில்லை கிளிநொச்சி மக்களுக்காக யாழ். நகரில்வாக்குச் சாவடி அமைக்கப்பட்டது. அங்கு எவ்வாறு கிளிநொச்சி மக்கள் சென்று வாக்களிக்க முடியும். கிளிநொச்சி மக்களுக்காக யாழ்ப்பாணத்தில் யார் வாக்குப் போட்டார்கள் என்பது அறிந்தவர்களுக்குத்தான் தெரியும் என்றும் அவர் மேலும் நடந்து முடிந்ததேர்தல் தொடர்பாக குற்றம் சுமத்தியுள்ளார். [க-உ]

## உடைக்கப்பட்டநிலையில் இரும்புப்பெட்டகம் பல இலட்சம் ரூபா திருட்டு

(தென்மராட்சி)

சாவகச்சேரி பல நோக்குச் சங்கத்தின் பொருட்கள் உடமைகள் யாவும் காணாமல் போய் உள்ளதாக கடந்த வாரம் அங்கு சென்ற கூட்டுறவுச் சங்க நிர்வாகிகள் ஊழியர்களால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கூட்டுறவுச் சங்கத்தின் கிராமிய வங்கியின் இரும்புப் பெட்டகம் உடைக்கப்பட்டு அதனுள் இருந்த பலலட்சம் ரூபா எடுக்கப்பட்டுள்ளதாகவும், புடவைப்பகுதி, கட்டிடப் பகுதி விற்பனை நிலையங்களிலும், சங்கத்தின் பிரதான களஞ்சியத்தில் இருந்த அத்தியாவசியப் பொருட்களும் காணாமல் போயுள்ளன என அறியப்படுகின்றது.

அதேவேளை சங்கத்தின் மாடிக்கட்டிடக் கூரை சேதமாக்கப்பட்டதனால் மழை வெள்ளம் புகுந்து பல ஆவணங்கள் முற்றாகப் பழுதடைந்து விட்டதாகவும் அங்கு சென்று திரும்பியவர்களால் கூறப்பட்டுள்ளது. (க-77)

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்



## காஷ்மீர் எல்லைப் பகுதியில் இந்தியா யுத்த நிறுத்தம் அறிவித்தால் நாமும் அதற்கு தயார்

### ஹிஸ்புல் இயக்க பிரமுகர் தெரிவிப்பு

(இஸ்லாமபாத்)

இந்தியா காஷ்மீர் எல்லைப் பகுதியில் யுத்த நிறுத்தத்தை அறிவிக்குமாயின் நாமும் அதற்கு தயாரென பாகிஸ்தானில் செயற்படும் ஹிஸ்புல் முஜாகுதீன் இயக்க பிரமுகர் தெரிவித்துள்ளார்.

அவர் இது தொடர்பாக இலண்டன் பி.பி. ஸிக்கு பேட்டியளிக்கையில்;

இந்தியாவிற்கு பேச்சு வார்த்தையில் உண்மையான நம்பிக்கையிருக்குமாயின் முதலில் யுத்த நிறுத்தத்தை அறிவிக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.

யுத்த நிறுத்தம் ஏற்படும் பட்சத்தில் தாங்களும் அப்படியே யுத்த நிறுத்தத்தை பேணப் போவதாகவும் தெரிவித்தார். (து)

## விஷ சாராயம் அருந்திய 51 பேர் பரிதாபகர மரணம் எல்சல்வடோரில் சம்பவம்

[லண்டன்]

எல்சல்வடோர்நகரில் விஷ சாராயம் அருந்தி 51 பேர் மரணமடைந்துள்ளனர்.

இதனையடுத்து நகரின் அனைத்து மதுபான சாலைகளும் நேற்று மூடப்பட்டன.

54 லட்சம் மக்கள் தொகையைக் கொண்ட இந்நகரின் 5 நகரசபைக்குட்பட்ட பிரதேச சபைகளிலும் அவசரகால நிலை தொடர்ந்து பிரகடனப் படுத்தப்பட்டுள்ளது.

இந்நகரிலுள்ளசட்டவிரோதமான மதுபான சாலைகளினாலேயே மேற்படி உயிரிழப்புகள் ஏற்படுவதாக கூறப்படுகிறது. (த)

## உகண்டா நாட்டில், வேகமாகப் பரவும் வைரஸ் காய்ச்சல் மக்களின் உயிருக்கு அச்சுறுத்தல்

(கம்பலா)

உகண்டாநாட்டில் அச்சுறுத்தலாக உருவெடுத்துள்ள கிபோலா வைரஸ் காய்ச்சலுக்கு பலியாவோர் தொகை நாளுக்கு நாள் அதிகரித்து வருவது குறித்து வைத்திய வட்டாரங்கள் பெரும் அதிர்ச்சி வெளியிட்டுள்ளன.

அங்கு மிகவேகமாகப் பரவி வரும் இக்காய்ச்சலுக்கு இலக்காகிய 43 பேர் அண்மைக்காலத்தில் பலியாகி இருப்பதாக தெரியவருகிறது.

மேற்படி வைரஸ் காய்ச்சலினால் பீடிக்கப்பட்ட பலர் அங்குள்ள மருத்துவமனைகளில் அனுமதிக்கப்பட்டிருப்பதால் இடப்பற்றாக்குறை நிலவுவதாகவும் கூறப்படுகிறது.

உணவுப்பஞ்சம் தலைவிரித்தாடும் உகண்டா நாட்டில் தோன்றிஉள்ள இவ் வைரஸ் காய்ச்சல் அந்நாட்டை மேலும் மரணப்பிடிக்குள் தள்ளியிருப்பதாக நோக்கர்கள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

இந்நோயைக் கட்டுப்படுத்துவதற்கு அங்கு இதுவரை விசேட தடுப்பூசி எதுவும் கண்டுபிடிக்கப்படாத காரணத்தினால், நோயால் பீடிக்கப்பட்ட 10 பேரில் மூவர் உயிரிழந்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, 1996 இல் தோற்றம் கொண்ட இந்நோய் காரணமாக இதுவரை அங்கு 793 பேர் உயிரிழந்திருப்பதும் குறிப்பிடத்தக்கது. (க)

## ஜப்பானின் அபரிமித வளர்ச்சி கண்டு சீனப் பிரதமர் புளகாங்கிதம்

(ரோக்கியோ)

ஜப்பானின் தொழில்நுட்ப முன்னேற்றத்தையும் வர்த்தக ரீதியான வளர்ச்சியையும் ... தொழிற்சாலைகளையும் தான் கண்டு மகிழ்வதாகக் குறிப்பிட்டார்.

சீன வர்த்தகத்தை வளப் ...

## பாகிஸ்தான் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்படுமாயின் அணுகுண்டு பிரயோகிக்க நேரிடும்

### இராணுவ ஆட்சியாளர் எச்சரிக்கை

(இஸ்லாபாத்)

பாகிஸ்தானின் பாதுகாப்புக்கு அச்சம் நேரிட்டால் அணுக்குண்டை பயன்படுத்த வேண்டிவரும் என்று பாகிஸ்தான் அதிபர் தெவித்துளளார்.

நேற்று இஸ்லாமபாத்தில் தொலைக்காட்சி பேட்டி ஒன்றில் இராணுவ ஆட்சியாளர் ஜெனரல் பெர்வேஸ் முஷாரப்மேற்கண்டவாறு எச்சரித்தார்.

அவர் இது தொடர்பாக குறிப்பிடுகையில்; அணுக்குண்டை பயன்படுத்த தமக்கு விருப்பம் இல்லையென்றும் ஆனால் இந்தியாவிடமிருந்தோ பிறநாடுகளிடமிருந்தோ அச்சுறுத்தல்கள் வருமாயின் அணுக்குண்டையோ மற்றும் அணுவாயுதங்களைப் பயன்படுத்துவது பற்றியோசிக்க வேண்டிவரும்என்று அப்பேட்டியில் தெரிவித்தார்.

இதேவேளை பாகிஸ்தானிடம் 20க்கு மேற்பட்ட அணுக்குண்டுகள் இருப்பதாகவும் பாகிஸ்தானிலிருந்து அண்டை நாடுகளைத் தாக்கக்கூடிய அதிநவீன ஏவுணைகள் இருப்பாதகவு மஅமெரிக்க விஞ்ஞானக் கழகம் தெரிவித்தது. (து)

## நடுவானில் விமானங்கள் மோதின ஒருவர் பலி; பலர் காயம்

### அஸ்ஸாம் மாநிலத்தில் சம்பவம்

(புதுடில்லி)

அஸ்ஸாமில் இருபோர் விமானங்கள் மோதிநொருங்கியதில் ஒருவர்பலியானார்; பலர் காயமடைந்தனர்.

நடுவானில் பறந்துகொண்டிருக்கையில் ரஷ்ய தயாரிப்பான எம்.22ரகமிக்விமானங்கள் மோதியதில் இவ் அனர்த்தம் இடம்பெற்றது.

இருவிமானங்களும் பயிற்சியில் ஈடுபட்டுக் கொண்டிருக்கையில் மோதியனவா பயணித்துக் கொண்டிருக்கையில் மோதியனவா என்ற விபரங்கள் சரியாக வேளிவரவில்லை.

இதேபோன்று கடந்தவாரமும் ஒரு இந்தியப்படைமிக் விமானம் விழுந்து நொருங்கியது குறிப்பிடத்தக்கது. (து

## வெறுங்கையுடன் திரும்புகிறார்கள்

ஐந்தாவது முறையாக நக்கீரன் கோபால் வீரப்பனை சந்தித்து விட்டு சென்னை திரும்பி விட்டார்.

இதேவேளை தமிழ் தேசிய இயக்கத்தைச் சேர்ந்த பழ. நெடுமாறனும் மற்றும் இருவரும் வந்து கொண்டிருப்பதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

நடிகர் ராஜ்குமாரை இவர்களால் இன்னும் வீரப்பனிடமிருந்து பேச்சு வார்த்தையில் மீட்கமுடிய வில்லை என்று சொல்லப்படுகிறது. (து)

## நடிகர்ராஜ்குமார் விடுதலைவிவகாரம் வீரப்பன் புதிய நிபந்தனை விதிப்பு

[சென்னை]

கன்னட நடிகர் ராஜ்குமார் விடுதலை தொடர்பாக சந்தனமரக் கடத்தல்காரன் வீரப்பன் புதிய நிபந்தனை விதித்துள்ளதாக தெரிய வருகிறது.

பிரஸ்தாப நடிகர் விடுவிக்கப்பட வேண்டுமாயின் தன்னை அதிரடிப்படையினரைக் கொண்டு கைது செய்ய முற்படக் கூடாதுஎன்ற புதிய நிபந்தனையை முன்வைத்துள்ளாராம்.

இதே வேளையில் பிணையாளாக வைக்கப்பட்டிருக்கும் நடிகர் ராஜ்குமாரின் மருமகனான கோவிந்தராஜ் வீரப்பனால் விடுவிக்கப்பட்டு விட்டதாகவும் அவர் அனேகமாக பெங்களூரை அடைந்திருப்பாரென்றும் இவ்விவகாரத்தில் ஈடுபட்டு வரும் தமிழ் தேசிய இயக்கத் தலைவர் பழ. நெடுமாறன் தெரிவித்துள்ளார்.

இதே வேளை் பழ. நெடுமாறன் நக்கீரன் ஆகியோருடனான பேச்சுக்கள் தொடர்ந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது. அனேகமாக தடா கைதிகளின் விடுதலையில் தான் ராஜ்குமார் விடுதலை தங்கியுள்ளதாகவும் தெரிய வருகிறது. (க-து)

### செய்திப்பரல்

★ இந்திய மத்திய பிரதேசத்தில் நேற்று நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளது.

★ பங்களாதேஷ் பிரதமர் ஷேக்ஹஸீனா விரைவில் ...

## தொடரும் இஸ்ரேல - பலஸ்தீன பேச்சு நம்பிக்கையூட்டுவதாக இல்லை

விட்டதாகவும் அவர் அனேக

தெரிய வருகிறது. (க-து)

## சீனப் பிரதமர் புளகாங்கிதம்

(ரோக்கியோ)

ஜப்பானின் தொழில்நுட்ப முன்னேற்றத்தையும் வர்த்தகரீதியான வளர்ச்சியையும் கண்டு புளகாங்கித மடைகிறேன் என்றார் சீனப் பிரதமர்.

ஜப்பானுக்கு அரச முறைப் பயணமாக சென்றிருக்கும் சீனப் பிரதமர் யூறோங் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் இது தொடர்பாக மேலும் தெரிவிக்கையில்; நவீன தொழில் நுட்பங்களும் மற்றும் வர்த்தக ரீதியான முறையில் உற்பத்தியாகும் மின்னியல் பொருட்களையும் தொழிற்சாலைகளையும் தான் கண்டு மகிழ்வதாகக் குறிப்பிட்டார்.

சீன வர்த்தகத்தை வளப்படுத்தவும் நவீன தொழில் நுட்பத்தை சீன – உலக வர்த்தகத்துடன் இணைக்கவும் சிலவற்றைக்கண்டறிவதற்கே பிரதமர் யூகோஸ் சீனா வந்துள்ளார் என்று தெரிவிக்கப்படுகிறது.

ஜப்பானின் முன் மாதிரியைக் கொண்டு சீனா உலக வர்த்தகத்தில்முன்னேற இருப்பதாகச் சீனப் பிரதமர் குறிப்பிட்டார். (து)

★ இந்திய மத்திய பிரதேசத்தில் நேற்று நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளது.

★ பங்களாதேஷ் பிரதமர் ஷேக்ஹஸீனா விரைவில் அமெரிக்க அதிபரைச் சந்தித்துப் பேசுவார்.

★ சந்தனக் கடத்தல் வீரப்பனைப் பிடிப்பதற்கு இற்றை வரை 400 கோடி ரூபா செலவாகியுள்ளதாக அரசு அறிக்கை தெரிவிக்கிறது.

★ பிரித்தானியா எக்ஸ்பிரஸ் செய்தி நிறுவனத்தை சிந்துஜா குடும்பத்தினர் வாங்க இருக்கிறார்கள்.

(து)

## விலை உயர்வைக்கண்டித்து சிம்பாவே நாட்டில்தொடர்போராட்டம்

(ஹராரே)

சிம்பாவே நாட்டின் தலைநகர் ஹராரேயில்,உணவுப் பொருள் விலையேற்றத்தைக் கண்டித்து பொதுமக்களால் நடத்தப்பட்டு வரும் போராட்டம் நேற்று 3 வது நாளாகவும் தொடர்வதாக அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஆர்ப்பாட்டக்காரர்கள்மீது பொலிஸார் தடியடிப் பிரயோகம்,கண்ணீர்ப்புகை வீச்சு மேற்கொண்டு அவர்களது முயற்சியை முறியடிக்க முயன்ற போதும் அவர்களது போராட்டம் தொடர்ந்தும் நடைபெற்று வருகிறது.

ஆர்ப்பாட்டம் புரிந்தவர்களில் 20 பேரை பொலிஸார் கைது செய்திருப்பதாக வேறோர் செய்தி தெரிவித்துள்ளது.

இதேசமயம்,மேற்படி அரசிற்கெதிரான ஆர்ப்பாட்டத்தின் பின்னணியில் சிம்பாவே எதிர்க்கட்சிகள் செயற்படுவதாக அந்நாட்டு அரச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

எனினும்,அரசின் அட்டூழியத்தினை பொறுக்கமாட்டாத பொதுமக்களே இவ் ஆர்ப்பாட்டங்களை ஏற்பாடு செய்து நடாத்தி வருவதாக சம்பந்தப்பட்ட வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

(க-உ)

## தொடரும் இஸ்ரேல - பலஸ்தீன பேச்சு நம்பிக்கையூட்டுவதாக இல்லை

(கெய்ரோ)

மேற்குக்கரை மற்றும் காஸாப் பகுதிகளில் இஸ்ரேலியப் படைகளுக்கும் பலஸ்தீனியர்களுக்கும் இடையே தொடர்ந்து வரும் மோதல்களை தடுத்து நிறுத்தும் வகையில் எகிப்தில் ஆரம்பமாகியிருக்கும் பேச்சுக்கள் நம்பிக்கை ஊட்டக் கூடியனவாய் இல்லை என சம்பந்தப்பட்ட இருதரப்பினருமே அவநம்பிக்கை வெளியிட்டுள்ளனர்.

கடந்த சில வாரங்களாக இஸ்ரேலியக் கட்டுப்பாட்டுப் பகுதிகளான மேற்குக்கரை மற்றும் காஸாவில் இஸ்ரேலிய இராணுவத்தினருக்கும் பலஸ்தீனர்களுக்கும் இடையில் நடந்துவரும் மோதல்களில் நூற்றுக்கணக்கானோர் கொல்லப்பட்டனர்.

இதனைத் தடுத்து நிறுத்தும் வகையில்,ஐ.நா. செயலாளர் நாயகம் கோபி அனனின் தீவிர முயற்சியின் பெயரிலும்,அமெரிக்க அதிபர் பில்கிளின்டனின்அனுசரணையுடனும் எகிப்திய செங்கடல் ஓய்வுத்தலத்தில் நிபந்தனைகள் ஏதுமற்ற வகையில் சம்பந்தப்பட்ட இருநாட்டு தலைவர்களும் பேச்சுக்கள் நடத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இஸ்ரேல் தேவையற்ற விடயங்களைப் பேசி நேரத்தை வீணடித்து வருவதாக, பலஸ்தீன தகவல்துறை அமைச்சர் நடைபெற்றுவரும் பேச்சுக்கள் குறித்து அதிருப்தி வெளியிட்டுளளார்.

பேச்சுக்கள் சிக்கல் நிறைந்ததாகவும்,கடினமானதாகவும் வாதங்கள் நிரம்பியதாகவும் இருப்பதாக இஸ்ரேலுக்காக குரல்தரவல்ல அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை,பேச்சுக்கள் நடைபெற்று வரும் சமயத்தில் மேற்குக்கரை மற்றும் காஸாப்பகுதிகளில் மோதல்கள் தொடர்ந்துநடைபெற்று வருவதாகவும்,

கெய்ரோ நகரில்,யூதக்குடிகளைப் பாதுகாத்துவரும் பாதுகாப்பு படையினர்க்கும் இடையே இடம் பெற்ற மோதல்களில் பலஸ்தீனியர் பலர் காயமடைந்திருப்பதாகவும் அறிய முடிகிறது. (உ)

## குவைத் வெற்றி

(குவைத் )

ஆசிய நாட்டிற்கான கால்பந்தாட்டமுதல் சுற்றுபோட்டியில் நேற்று முன் தினம் குவைத், தென்கொரியாவை 2–0 என்ற கோல்கணக்கில் வெற்றிபெற்றது. (க:த)

‘‘எப்பொருள் யார் யார்
வாய்க் கேட்பினும் அப்
பொருள் மெய்ப்பொருள்
காண்பது அறிவு,,

குறள்

# வலம்புரி

## இந்தியாவைப் போலிருந்தால்...

உலக ஜனநாயகத்தில் இந்தியா முதன்மையான தென்பதால் இருவேறு கருத்திற்கிடமில்லை. பல்லின - மத - மொழியால் வேறுபட்ட நூறுகோடிக்கு மேற்பட்ட மக்கள் சனத்தொகையைக் கொண்ட இந்தியாவில் நடைபெறும் தேர்தல் முறைகளும், பிரச்சாரங்களும், வெற்றி முடிவுகளும் பிறநாட்டு மக்களையும் ஆர்வமடையச் செய்யுமளவிற்குஅங்கு ஜனநாயகம் ஓங்கியுள்ளது,

இலங்கையில்இடம்பெறும் தேர்தலை விட இந்தியத் தேர்தலிலேயே ஈழத்தமிழர்கள் அதிகஅக்கறையும்- ஆர்வமும் கொண்டிருப்பதை கடந்த கால ஆய்வுகள் நிரூபித்துள்ளன. இதற்கு அங்கு காணப்படும் ஜனநாயகத்தைக் காக்கும் சட்டங்களே காரணமெனலாம்.

குற்றமென்று வந்துவிட்டால் சாதாரண இந்தியப் பிரஜை முதல் உன்னதமான குடியரசுத்தலைவர் வரை நீதியின் முன் நிறுத்தப்பட்டு விளக்கம்– விசாரணை - தண்டனை என்றெல்லாம் வழங்கப்படும். இதில் எந்த மாற்றமும் இல்லை. இதற்கு கடந்த வாரம் அங்குஇடம்பெற்ற இரு முக்கிய நீதிமன்றத் தீர்ப்புக்கள் சான்றாகும்.

தமிழ் நாட்டின் முன்னாள் முதலமைச்சர் செல்வி ஜெயலலிதாவின் ஊழல்விவகாரத்தால்ஆறு வருடங்களுக்கு அவர்தேர்தலில் போட்டியிட முடியாதென நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியுள்ளது.

அதே வேளை இந்தியாவின் முன்னாள் பிரதமர் பி.வி. நரசிம்மராவ் இலஞ்சம் கொடுத்ததன் பேரில்

# யாழ்ப்பாண நவீன ஓவியத்தின் தந்தை “மாற்கு”

# அவரின் மறைவு ஈழமண்ணிற்கு பேரிழப்பு

யாழ்ப்பாண நவீன ஓவியத்தின் தந்தையான மாற்கின் மறைவினால் ஒரு புதுமைக்கலைஞனை நம்தேசம் இழந்துவிட்டது. ஆனாலும் மாற்கு மறைந்தாலும் அவ

யம் (Artist Maniyam) என்று அழைப்பது போல நவீன ஓவியம் என்றால் மாற்கு என்று கூறுமளவிற்கு தனது முத்திரையை பதித்துவிட்டார் மாற்கு.

> ஐரோப்பிய ஓவியப் புதுமைகளைக் கண்டு ஈழத்தில் ஓவியத்தை புதுமையாக படைத்தவர் மாற்கு அவர் மடிந்தாலும் அவர் ஓவியப்பணி வாழ்ந்து கொண்டேயிருக்கும்.

ரின் படைப்புக்கள் பல சந்ததிகள் வாழத்தான் போகின்றது. அவரின் வழிகாட்டலில் உருவான பல சிஷ்யர்கள் அவர் புகழை மென்மேலும் பரப்பிக் கொண்டிருக்கிறார்கள்.

ஐரோப்பாவின் 19ம்,20ம் நூற்றாண்டுகளில் தோற்றம் பெற்ற நவீன ஓவியங்கள் இன்று வரை சகல துறைகளிலும் செல்வாக்கு செலுத்தி நிற்கின்றன. முதலாம் உலக மகாயுத்தங்களின் விளைவும், கைத்தொழிற் புரட்சியின் விளைவான கமராவின் வருகையும் நவீன ஓவியங்களின் தோற்றத்திற்கு வித்திட்டன. 1943 ம் ஆண்டு சிங்களக் கலைஞன் லயனல்வென்ட் என்பவரால் ஆரம்பிக்கப்பட்ட ‘43 குழுவின் மூலம்’

1933 இல்குருநகரில் பிறந்த மாற்கு சிற்பங்கள் செய்வதிலும், படங்கள் கீறுவதிலும் சிறுவயதில் இருந்தே ஈடுபாடு கொண்டிருந்தார். சம்பத்திரிசியார் கல்லூரியில் எட்டாம் வகுப்பு படிக்கையில் வகுப்பு

> தமிழர் தம் வரலாற்றில் கறை படிந்த 1983 யூலை மாதத்தின் அவலங்கள் ஒரு உண்மைக் கலைஞனின் மனதைத் தொட்டது. இந்த உணர்வுகள் ஒரு புதுமைப் படைப்பாக மலர்ந்தது.

ஆசிரியரான குருவானவர் மார்சலின் ஜெயக்கொடியின் உருவத்தை வரைந்து பாராட்டைப் பெற்றார்.

195 இல் கொழும்பு நுண்கலைக் கல்லூரியில் சோந்து ஐந்து வருடங்கள் பயின்று

> மனக்கிளர்ச்சிகளை உருவகப்படுத்தி புதுமையான ஓவியமாக படைத்தால் மரபு வழிச் சமூகம் தன்னை பைத்தியக்காரன் என்று பழிக்குமோ என்று அஞ்சினார் மாற்கு.

இலங்கையின் நவீன ஓவியங்கள் அறிமுகப் படுத்தப்பட்டது. இக்குழுவின் ஒரு அங்கத்தவரான ஜோக்கீட் நவீன ஓவிய மாதிரியில் பௌத்த மத எண்ணக் கருக்களை ஓவியமாக்கினார்.

யாழ் மண்ணின் கலைஞர் மாற்கு யாழ்ப்பாணத்தில் நவீன ஓவியங்களை அறிமுகம்செய்தார். மேலைத்தேய நவீன ஓவியர் பிக்காசோவின் ஓவியப்பாணியின் (Style) நுட்பங்களை பின்பற்றி ஜோக்கீட் ஓவியங்களைப் படைத்தது போல மாற்கும் பிக்காசோவை பின்பற்றினார்.

தன் மனதில் எழும் உணர்வுகளை தான் விரும்பியவாறு புலப்படுத்த விரும்பினால் தன்னை ஒருவேளை மரபு வழிச் சமூகம் பைத்தியக்காரன் என்று கூறிவிடுமோ என்று மாற்கு அவர்கள் கூறுகையில் முரண்படும் சமூகச் சூழலில் வாழும் உண்மைக் கலைஞனின் துயரம்

பட்டம் பெற்றார். புகழ் பெற்ற ஓவியரும் விரிவுரையாளருமான ‘டேவிற்பெயின்டரின்’ அபிமானத்தை பெற்றவராக அங்கு விளங்கினார். 1957 இல் கொழும்பு கலா பவனத்தின் வருடாந்த ஓவியக் கண்காட்சியில் இரண்டாவது பரிசினையும் பெற்றார்.

மாற்கு தனது ஓவிய மோடியிலும், வரலாற்றிலும் பெருமளவு ஐரோப்பிய நவீன ஓவியம் பிக்காசோவை ஒத்தி

**து. துசியந்தன்**

ருக்கிறார். கோடுகளால், வடிவத்தால், வர்ணத்தால் செய்வது தான் ஓவியம் என்று எளிமையாக விளக்கும் மாற்கு சர்வ தேசிய மொழியாக இருத்தலும், காலத்தைபிரதிபலித்தலும் ஓவியத்தின் சமூகப் பயன்பாடு என்று சொல்கிறார்.

ளைக்காலம், நீலக்காலம், கோட்டுக்காலம் என நான்கு பிரிவுகளாக நோக்கப் படுகிறது.

மனிதக் கண்டுபிடிப்பின் உச்சத்தில் விஸ்வரூபமெடுத்த அணு ஆயுதங்களின் வருகை எதிர்காலத்தையே சூனியமாக்கியது. பொய்மையின் வடிவமாகக் காட்டி நின்றது. முழு மனிதகுலமும் சில கணப்பொழுதில் அழித்துவிடக் கூடிய நிலைக்கு தள்ளப்பட்டது. எதிர்காலமே இருண்டு போனது இந்த உணர்வலைகளை வெளிப்படுத்த முற்பட்ட போது நவீன ஓவியங்கள் முதன்மை பெற்றன. ஓவியர் பிக்காசோவின் புகழ்

பெற்ற குவர்ணிக்கா ஓவியம் இதற்கு சிறப்பான எடுத்துக் காட்டாகும்.

1937 இல் ஸ்பானியாவில் உள்நாட்டுப்போர் நடைபெற்றுக் கொண்டிருந்த வேளை ஜேர்மனிய போர் விமானங்கள் நடத்திய குண்டு வீச்சில் குவர்னிக்கா நகரம் பேரழிவைச் சந்தித்தது. இந்த உணர்வேபிக்காசோவைகுவர்னிக்கா ஓவியத்தை வரைய தூண்டியது.

யாழ்ப்பாணத்தின் பிக்காசோவான மாற்கின் ஓவியப் படைப்பிலும் உள்நாட்டு இனவாதகொடூரஅழிவுத்தாக்கத்தை ஏற்படுத்தி இருக்கிறது. என்பதற்கு ‘யூலை 83, என்ற ஓவியம் சிறந்த எடுத்துக்காட்டாகும். 1983 யூலை மாதம் நடந்த இனக் கலவரத்தின் கொடூரத்தால் ஏற்பட்ட மனக்கிளர்ச்சி தான் இவ் ஓவியத்தைப் படைக்க காரணமானது.

மாற்கின் அரசியல் நிலையைச் சித்தரிக்கும் ஓவியங்களில் விடிவு என்ற ஓவியம் மிக முக்கியத்துவம் வாய்ந்ததாகும். இருளில் இருந்து ஒளியை வேண்டி அவாவுறும் ஒரு மனிதனின் ஊடாக சுதந்திர வேட்கையை திறமையாக காட்டியிருக்கிறார் மாற்கு. பின்னணியில் பார்த்திருக்கும் கருஞ்சிவப்பு வர்ணம் அவற்றை அடைவதற்கு சிந்தப்படும் குருதியை சித்தரிக்கத் தூண்டுவதாயுள்ளது எற்

படைப்புக்கள் நிகழ்கையில் அவற்றுக்கு வடிவம் கொடுப்பதோடு தம்பணி முடிகிறதாகவேமாற்கு அவர்கள் கூறுவார். ஆயிரம் படைப்புகளை உருவாக்கியுள்ளார். அவற்றில் பல வெளிநாடுகளுக்கு எடுத்துச் செல்லப்பட்டன. மாற்கு புதிது புதிதாய் பரி

## மறைந்தார் மாண்பு

சோதனைகளில்ஈடுபடுவதிலே மிகுந்த ஆர்வம் கொண்டவராய் இருந்தார்.

பிக்காசோ தனது நவீன ஓவியத்திற்கான மூலத்தை கிராமியக்கலைகளில்இருந்தே பெற்றார். அதாவது ஆபிரிக்க பழங்குடிகளின் மரபு வழி ஓவியங்களின் ஒரு சில அம்சங்களை விருத்தி செய்வதன் மூலம் நவீன ஓவியத்திற்கான வித்தைப் பெற்றார். இதைப் போன்றே மாற்கும் தனதுஓவியத்திற்கானவித்தை கிராமியக்கலைகளில்இருந்தே பெற்றார்.

மென்மையாக வர்ணங்கள் பாவிக்கப்பட்டிருக்கும் ‘மனிதம்’ மாற்குவின் ஆரம்பகால ஓவியங்களில் ஒன்று இது நீர் வர்ணத்தினால் வரையப்பட்டது பெரும்பாலான ஓவியங்கள் ‘‘வர்ணச்சோக்குகளால் வரையப்பட்டுள்ளன. அதுவும் வல்லவனுக்கு புல்லும் ஆயுதம் என்பது போல சாதாரண கடதாசியில் வரையப்பட்டுள்ளன. இவரது படைப்புக்களில் இறுதிக் காலப் பகுதிகளில் ஓவியங்களில் கோடுகளே முதன்மை பெறுகின்றன. இதனை சிறப்பாக ‘மூவர்’, ‘பெண்’, ‘காதல்’ ‘ஜூலை 83’ ‘ஒத்திசைவு’ போன்றவற்றில் இருந்து உணரலாம்.

மாற்குவின் முக்கிய பரிசோதனை இராகங்கள் பற்றியது ‘இராகமாலா’ என்ற பெயரில் இந்தியாவில் இராஜபுத்திர ஓவியங்களில் கையாண்ட முன் முயற்சியைத்தொடர்ந்து மாற்குவும் இந்தப் பரிசோதனையில் ஈடுபடுகின்றார்.

படிமங்கள் விழ மறுத்துவிலகியோடும் இசையின்விசேஷஅருபத்தன்மையைக் கோடுகளாலும், நிறங்களாலும் தீர்மானிக்க முயலுவது பிரச்சினைக்குரியவிடயம்தான். மாற்கிற்கு இதில் வெற்றி கிட்டியதா? இல்லை என்று சொல்லமுடியாது. ஆனாலும் வெல்ல

அதே வேளை இந்தியாவின் முன்னாள் பிரதமர் பி.வி. நரசிம்மராவ் இலஞ்சம் கொடுத்ததன் பேரில் அவருக்கு மூன்று வருடங்கள் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

இந்தியாவில் இடம் பெறும் இந் நடவடிக்கைகள் வெறும் தண்டனையாக மட்டுமன்றி வருங்கால ஆட்சியாளர்களுக்கு ஓர் எச்சரிக்கையாகவும் அமையும். இதன் மூலம் இந்திய மண்ணில் ஜனநாயகம் நின்று நிலைக்கும் என்பதில் எந்த ஐயமுமில்லை.

இதே ஜனநாயகத்தின் பெயரால் இலங்கையில் ஆட்சி இடம் பெற்றாலும் ஓர் இனம் தனது அதிகார வெறியை அமுலாக்க மற்றொருஇனத்தின் மீது பல்குழல் தாக்குதல், மிக்ரக யுத்த விமானகுண்டுவீச்சு என்றெல்லாம் போராயுதம்கொண்டு தாக்கிஅழித்தொழிக்கிறது. இவற்றுக்கெல்லாம் இந்தியாவைப் போன்று நீதி கேட்கமுடிந்தால் அங்குள்ள சட்டங்கள் இங்கும் சாகா வரம் பெற்றிருந்தால், இலங்கையின் ஆட்சி அதிகாரத்தில் இருந்த -இருக்கின்ற பலர் ஆயுள் பூராக சிறைக்குள் வாசம் செய்ய வேண்டியவர்களாக இருப்பர் என்பதுடன் மறைந்து போன ஆட்சியாளர்களுக்கு ம்தேகாந்த நிலையில் பலவருட கடூழியச் சிறைத் தண்டனை விதிக்கப்படுமென்பது திண்ணம்.

காரன் என்று கூறிவிடுமோ என்று மாற்கு அவர்கள் கூறுகையில் முரண்படும் சமூகச் சூழலில் வாழும் உண்மைக் கலைஞனின் துயரம் தொனிக்கிறது. ஆனாலும் மாற்கு தனது நவீன ஓவிய கண்டுபிடிப்பால் சமூகத்தை வெற்றி கொண்டார் என்பது உண்மையானது ஆகும். ஓவியர் என்றால் ஆட்டிஸ் மணி சர்வ தேசிய மொழியாக இருத்தலும், காலத்தைபிரதிபலித்தலும் ஓவியத்தின் சமூகப் பயன்பாடு என்று சொல்கிறார்.

பிக்காசோவின்ஓவியவாழ்க்கையினை நீலக்காலம், இளஞ்சிவப்புக் காலம் எனப் பிரித்துள்ளது போன்று மாற்கு அவர்களின் ஓவிய வாழ்க்கையும் மங்கல் நிறக்காலம் வெள்

பின்னணியில் பார்த்திருக்கும் கருஞ் சிவப்பு வர்ணம் அவற்றை அடைவதற்கு சிந்தப்படும் குருதியை சித்தரிக்கத் தூண்டுவதாயுள்ளது ஏற்கனவே குறிப்பிட்ட யூலை 83உம் பேரினவாதிகளினால் நிகழ்த்தப்பட்ட படுகொலைகளின் குரூரத்தை இயல்பாக வெளிக்கொணரும் வடிவமைப்புடன் சிறப்பானதாக அமைகிறது. வடக்கும்– கிழக்கும், எமக்காக, காவல், போன்ற ஓவியங்கள் இவரின் குறிப்பிடத்தக்க அரசியல் ஓவியங்கள் ஆகும்.

ளைக் முயலுவது பிரச்சினைக்குரியவிடயம்தான். மாற்விற்கு இதில் வெற்றி கிட்டியதா? இல்லை என்று சொல்லமுடியாது. ஆனாலும் வெல்ல இன்னும் இருக்கிறது என்பது பலருடைய அபிப்பிராயம். குறித்த இராகங்கள் மனதில் தூண்டிவிடும் உணர்வு நிலைகளை, அதே சம பலத்துடன் தூண்டிவிடும் ஆற்றல் இந்தக் கோடுகளுக்கும், நிறங்களுக்கும் இருக்க வேண்டும் என்று மாற்கு கருதினார்.

விஞ்ஞானத்தைப் போல கலையும் கலைஞர்களின் கண்டுபிடிப்பாகும். ஈழத்து ஓவிய வரலாற்றில் ஓவியர் கண்டுபிடிப்பிற்கான சிறப்பான இடத்தை மாற்கு பெறுகிறார். அவருக்குப்பின் அவருடைய படைப்புக்கள் இலைமறை காய்களாக மறைத்தும், அழிந்தும் போய்க் கொண்டிருக்கின்றன. நாட்டின் சூழ்நிலையும், நுண்கலையாளர்களின்அக்கறையீனமும் இந்த நிலமைக்குக் காரணமாகும்.

# பொது ஜன ஐக்கிய முன்னணியினர் தேசியப்பட்டியல் விபரம்

## தேர்தல் ஆணையாளருக்கு அனுப்பி வைப்பு

(கொழும்பு)

பொது ஜன ஐக்கிய முன்னணியினர் அனுப்பி வைத்த நாடாளுமன்ற தேசியப்பட்டியல் தமக்குக் கிடைத்திருப்பதாகத் தேர்தல் ஆணையாளர் அறிவித்துள்ளார்.

அந்தப்பட்டியலில் கட்சியிலிருந்து சிபார்சு செய்யப்பட்டோர் விபரம் வருமாறு,

லக்ஷ்மன் கதிர்காமர், அலவி மௌலானா, றொனி டிமெல் விஜயபால மென்டிஸ், பட்டி வீரக்கோன், யூ.எல்.எம் ஹனியா, பேராசிரியர் லெஸ்லி குணவர்த்தனா, ராஜா கொலுரே, காத்தான் மாரிமுத்து, மேவின் சில்வா, சோமவீரசந்திர சிறி, கரேந்திர கொறியா, அகமட் றிஸ்வி, சின்ன லெப்பே ஆகியோராவர். து

நாடாளுமன்ற . நீக்கியிருக்க வேண்டும் என்று அரசியல் அவதானிகள் கருதுகின்றனர்.

இதேவேளை பொதுஜன ஐக்கிய முன்னணிக்கு சார்பாகவும், ஜனாதிபதி சந்திரிக்கா குமாரதுங்காவுக்கு ஆதரவாகவும் தமது ஈ.பி. ஆர்.எல்.எவ். கட்சி செயற்படுமென்றும் வரதராஜப் பெருமாள் தெரிவித்துள்ளார்

(ந-2)

# சிப்பாய் தற்கொலை

(யாழ்ப்பாணம்)

இராணுவசிப்பாய் ஒருவர் மனவிரக்தியால் தற்கொலை செய்துள்ளார் எச். பி. எஸ். மதுசங்கர் (வயது 25) என்பவரே இவ்வாறு தற்கொலை செய்தவராவார். (க–12)

# குழந்தை பிரசவித்த தாய் மரணம் திருநெல்வேலியில் சம்பவம்

(யாழ்ப்பாணம்)

ஊரடங்கு வேளையில் குழந்தையைப் பிரசவித்த தாய் ஒருவர் மரணத்தைத் தழுவிய பரிதாப சம்பவம் அண்மையில் திருநெல்வேலிப் பகுதியில் இடம்பெற்றது.

சுரேஸ் மகாலட்சுமி (வயது –34) என்பவரே பரிதாப மரணத்தைத் தழுவியவராவர்.

இச்சம்பவம்பற்றி மேலும் தெரியவருவதாவதுகுழந்தை பிறந்து தாயும், சேயும் நலமாக இருந்தபோதிலும் ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்வதற்கு ஊரடங்கு தடையாக இருந்ததால் பிரஸ்தாப தாய் மரணமானார். (க-12)

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்

# புனர்வாழ்வு அமைச்சில் இழுபறி

# பொ.ஐ.முன்னணிக்குத்திண்டாட்டம்

(கொழும்பு)

தேசிய ஐக்கிய முன்னணியின் துணைத்தலைவர் ரவூப் ஹக்கீமும், ஈ.பி.டி.பியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தாவும் புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சை தமக்குத்தருமாறு கோரி வருவதை அடுத்து இவ்வமைச்சை வழங்குவதில் இழுபறி நிலை தோன்றியுள்ளது.

புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சு வடக்கு, கிழக்கு என இரண்டாக பிரித்து வழங்கப் படவுள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன. (ந-4)

## மட்டு பல்கலையில் பகிஷ்கரிப்பு

(ஏறாவூர்)

வந்தாறுமூலையில் உள்ள கிழக்குப் பல்கலைக்கழகத்தில் நேற்று ஊழியர்களுக்கும், விரிவுரையாளர்களும் நண்பகல் ஒருமணிநேரம் கடமைக்குச்செல்லாது பகிஷ்கரிப்பில் ஈடுபட்டிருந்தனர்.

மட்டக்களப்புகளுதாவளையில் கிழக்குப்பல்கலைக்கழக மாணவர் ஒருவரும் அதிரடிப் படையினரால் தாக்கப்பட்ட சம்பவத்தை கண்டித்தே இப் பகிஷ்கரிப்பு இடம்பெற்றது. (வ)

## இலங்கையின் தேர்தலில் அமெரிக்காவுக்கு அக்கைறயில்லை

### வெளிவிவகார அமைச்சு தகவல்

நடந்துமுடிந்த பாராளுமன்ற தேர்தல் முடிவுகளில் அமெரிக்கா கிளிங்டன் நிர்வாகம் எந்தவிதமான ஆர்வமும் காட்ட வில்லையென அமெரிக்க வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

இலங்கையில் காணப்படும் அரசியல்நெருக்கடிக்கும்இனப் பிரச்சினை தீர்வுக்கும் பேச்சு வார்த்தை மூலம் சமாதானத் தீர்வு காணப்பட வேண்டும் மென்று தெரிவித்த அமெரிக்க வெளிவியகார அமைச்சு, இலங்கையின் ஒருமைப்பாட்டையும் ஐக்கியத்தையும் பாதுகாக்கும் அதே வேளை இலங்கையின் சகல இனமக்களின் பாதுகாப்பையும் கௌரவத்தையும் உறுதிப் படுத்தும் வகையில்சமாதான பேச்சு வார்த்தை மூலம் இனப்பிரச்சினைக்கு தீர்வு காணப்பட வேண்டுமென்றும் வலியுறுத்திக் கேட்டுள்ளது. (வ)

## பொதுஜன ஐக்கியமுன்னணிக்கு நிபந்தனையற்ற ஆதரவு

### பேரியல் அஷ்ரப் தெரிவிபபு

(கொழும்பு)

நாட்டில் சமாதானத்தை ஏற்படுத்தி சகல மக்களுக்கும் நியாயத்தை வழங்குவதைத் தவிர, அமைச்சர் பதவி உட்பட வேறு எந்த முக்கியத்துவம் கொடுக்காது பொது ஜன ஐக்கிய முன்னணிக்கு ஆதரவு வழங்குவதென தேசிய ஐக்கிய முன்னணி முடிவு செய்துள்ளது.

தேசியப்பட்டியல் மூலம் தெரிவு செய்யப்பட்ட தேசிய ஐக்கிய முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் அக்கட்சியின் துணைத் தலைவி பேரியல் அஷ்ரப் நேற்று தொலைபேசி மூஉம் கட்சியின் நிலமை பற்றி விளக்கிக் கூறியதை அடுத்து இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

நாட்டின் இனவாதயுத்தத்தை நிறுத்தி சகல சமூகத்தவரும் ஒற்றுமையுடன் வாழக்கூடிய சூழ்நிலையை ஏற்படுத்தும் திறமை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவுக்குமாத்திரமே உண்டு இதனால் பொது ஜன ஐக்கிய முன்னணிக்கே தமது ஆதரவை வழங்குவதென தேசிய ஐக்கிய முன்னணி முடிவு செய்துள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (ந-4)

## தேசிய ..

முன்னணி அரசிற்கும் இடையே இடம்பெற்ற பேச்சு வார்த்தையின் போது ஏற்பட்ட இணக்கத்தை எழுத்து மூல ஒப்பந்தமாகஆக்க வேண்டுமென்று ஜனாதிபதியிடம் ஹக்கீம் கேட்டிருந்தார்.

முஸ்லிம் காங்கிரசின் இரு இணைத் தலைவர்களுக்குமிடையே ஏற்பட்டுள்ள கருத்து முரண்பாடு பொது ஜன ஐக்கிய முன்னணியின் மந்திரி சபை அமைப்பதற்கு முட்டுக்கட்டையை ஏற்படுத்தியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை பொது ஜன ஐக்கிய முன்னணியுடன் இணைந்த கட்சிகளுக்கு அமைச்சுப் பொறுப்புக்களை பகிர்ந்து வழங்குவதற்கு வசதியாக கூடிய எண்ணிக்கையில் அமைச்சுப்பதவிகளை உருவாக்க வேண்டிய இக்கட்டான சூழ்நிலைக்கு புதிய அரசு தள்ளப்பட்டுள்ளதாக அரசியல் அவதானிகள் கருதுகின்றனர்.

எது எப்படியாயினும் இவற்றுக்கெல்லாம் முற்றுப் புள்ளி வைத்து ஜனாதிபதி சந்திரிகா அமைச்சுப் பதவிகளை கூட்டுக் கட்சிகளுக்கு பகிர்ந்தளித்து எதிர்வரும் சனிக்கிழமை மந்திரிசபையை அமைத்து விடுவாரென அவருடன் நெருங்கிய வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (வ)

## அவசரகால ..

விடுதலைப்புலிகளுக்கெதிராக அரசாங்கம் நடத்தி வரும் யுத்த முறையில் எமக்கும் அரசுக்கும் இடையில் மாறுபட்ட கருத்துக்கள் இருப்பினும் அவசர காலசட்ட நீடிப்புக்கு நாம் ஆதரவாக வாக்களிப் போம்.

வடக்கு யுத்த களத்தில் இராணுவ நடவடிக்கை மூலமேபுலிகளைதோற்கடிக்க முடியும்என்றும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை அரசாங்கத்

## எந்தவொரு ..

யின் சிரேஷ்ட உபதலைவரும் யாழ்மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான வீ.ஆனந்தசங்கரி தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் பாராளுமன்றத்தில் அரசினால் சமர்ப்பிக்கப்படும் அவசரகால சட்டத்தையும் தமிழ் பேசும் மக்களின் அரசியல் அபிலாசைகளை எதிரான சகல நடவடிக்கைகளுக்கும் எதிர்த்து குரல் கொடுப்போம் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

அகில இலங்கை தமிழ் காங்கிரசின் தலைவரும் யாழ் மாவட்ட எம்பியுமான அ. விநாயகமூர்த்தி யுத்தத்தை முன்னெடுப்பதற்காக விதிக்கப்படும் அவசரகாலச்சட்டம்

## ஒலிம்பிக் வீராங்கனை சுசந்திகாவுக்கு 58'இலட்சம் ரூபா கார் அன்பளிப்பு

சிட்னி ஒலும்பிக்சில் பெண்களுக்கான 200 மீற்றர் ஓட்டத்தில் வெண்கலப்பதக்கம் பெற்று 52 வருடங்களுக்குப் பின் இலங்கைக்கு புகழ் தேடித் தந்துள்ள சுசந்திகா ஜெயசிங்காவைப் பாராட்டி சுமார் 58 லட்சம் ரூபா பெறுமதியான புத்தம் புதிய கார் ஒன்று அன்பளிப்புச் செய்யப்படவுள்ளது.

யுனைற்றட் மோட்டார் லங்கா லிமிற்றெட் நிறுவனத்தால் இன்று பிற்பகல் 2.45 மணிக்கு அதன் ஸ்தாபனத்தில் வைத்து இக் கார் அன்பளிப்பிச் செய்யப்படும். (ந-2)

## மட்டக்களப்புமாவட்டத்தில் ஜோசப்பின் தெரிவை கண்டித்து பூரணஹர்த்தால் அனுஷ்டிப்பு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் நடைபெற்ற பாராளுமன்ற பொதுத்தேர்தல் முடிவுகளைகண்டித்து மட்டக்களப்பில் ஹர்த்தால்அனுஷ்டிக்கப் பட்டது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் தமிழர் விடுதலைக் கூட்டணி சார்பில் போட்டியிட்டு வெற்றி பெற்ற ஜோசப்பராஜசிங்கத்தின் தெரிவை கண்டித்தே இக் ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது.

மட்டக்களப்பு மாவட்ட தேர்தல் முடிவுகள் முதலில் அறிவிக்கப்பட்ட பொழுது ஜோசப் பரராசசிங்கம் தோற்றதாக அறிவிக்கப்பட்டிருந்தது. வாக்குகள் இரண்டாம் முறை எண்ணப்பட்ட போது அவர் வெற்றி பெற்றதாகஅறிவித்தமைகுறிப்பிடத்தக்கது.

இக் ஹர்த்தாலின் போது மட்டக்களப்பில் பாடசாலைகள், பஸ்போக்குவரத்துக்கள் முற்றாக நடைபெறவில்லை கடைகள் பூட்டப்பட்டுநகரம் வெறிச்சோடியிருந்ததாக மட்டக்களப்பு செய்தியாளர் தெரிவித்துள்ளார். (வ)

## வடமாநில இந்துமாமன்றம் அங்குரார்ப்பணம் செய்யப்பட்டது

அகில இலங்கை இந்துமாமன்றத்தின் கொழும்புத் தலைமையகத்தின் அனுமதியுடன் வடமாநில இந்துமாமன்றம் அண்மையில் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது.

வடமாநிலத்தில் சைவத்தையும், தமிழையும் வளர்க்கும் நோக்குடன் அமைக்கப் பட்டுள்ள இவ்வமைப்பில் பின்வருவோர் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

அவர்களின் விபரம் வருமாறு;

காப்பாளர்களாக சுவாமி ஆத்மகனானந்தா (குருமுதல்வர்இராமகிருஷ்ண மிசன் கொழும்பு) சுவாமி சோமசுந்தரபரமாச்சார்ய சுவாமிகள் (குருமுதல்வர் நல்லை ஆதீனம்), தலைவராக கலாநிதி ச. நா. தணிகாசலம்பிள்ளை (மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர்), உப தலைவர் திருமதி க. பொன்னம்பலம் (அதிபர், வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை), பொதுச் செயலாளர் அ.சிறிக்குமரன் (அதிபர், யாழ். இந்துக்கல்லூரி), நிர்வாகச் செயலாளர் ஆசிரியர் சி. பத்மராஜா, பொருளாளர் சி. வெற்றிவேலாயுதம்மும் (காணக்காளர்), உப பொருளாளர் சு. நித்தியானந்தனும் (தொழிலதிபர்), தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இதேவேளை மன்ற அமைப்பாளராக சு. குணராஜாவும் மற்றும் நிர்வாக சபை உறுப்பினர்கள் எட்டுப்பேரும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். (ந-4)

## புதிய ..

முதலாவது கூட்டத்தொடரிலேயே அடுத்த ஒரு மாதத்திற்கான அவசரகாலச் சட்ட நீடிப்பு மசோதா பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டு நிறைவேற்றப்படவுள்ளது.

இக்கூட்டத்திலேயே பிரதி சபாநாயகரும், பாராளுமன்ற

## பார்வையாளர் அனுமதிக்கப்படுவர்

இன்று நடைபெறவுள்ள பாராளுமன்ற கூட்டத்திற்கு பார்வையாளராக ஒரு பாராளுமன்ற உறுப்பினருடன் மூவர் செல்வதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

பாராளுமன்ற நுழை வாசலில் பாராளுமன்ற உறுப்பி

ருடன் நெருங்கிய வட்டா
ரங்கள் தெரிவித்துள்ளன.
(வ)

**யாழ்ப்பாணம் பல்கலைக்கழகம் இலங்கை**

**உடற்கல்வி டிப்ளோமா கற்கை நெறி**

மேற்படி கற்கை
நெறிக்கு முதலாம் வரு
டத்திற்கு தெரிவு செய்
யப்பட்ட மாணவர்களுக்
கும், இரண்டாம் வரு
டத்திற்கு மீள்பதிவினை
மேற்கொண்ட மாண
வர்களுக்குமான விரிவு
ரைகள் 23-10-2000
அன்று காலை 8.30
மணிக்கு உடற்கல்வி டிப்
ளோமா கற்கை நெறி
அலகில் ஆரம்பமாகும்.

தவறாது விரிவுரை
களிற்கு சமுகமளிக்கு
மாறு கேட்டுக் கொள்
ளப்படுகின்றீர்கள்.

பதிவாளர்,
17-10-2000.
(கி-887)

மூலமேபுலிகளைதோற்கடிக்க
முடியும்என்றும் தெரிவித்துள்
ளார்.

இதேவேளை அரசாங்கத்
துக்கு ஆதரவு வழங்கும் சிறு
பான்மை கட்சிகள் அரசிற்கு
விடும் கோரிக்கைகள் நியாய
மற்றவை எனவும்அக்கட்சிகள்
தீவிரவாத நடவடிக்கையில்
ஈடுபடுகின்றன எனவும் அவர்
குற்றம் சாட்டியுள்ளார் (2)

**பாராளுமன்ற..**

தின் செயலாளர் நாயகம்
நேற்று ரிச்சட் பத்திரண
விடம் வழங்கியுள்ளதாகதெரி
விக்கப்படுகிறது.

இதேவேளை 1983ம்ஆண்டு
பாராளுமன்ற உறுப்பினராக
அரசியலில் பிரவேசித்தவர்
என்பது குறிப்பிடத்தக்கது.
(ந-4)

மாவட்ட எம்பியுமான அ,
விநாயகமூர்த்தி யுத்தத்தை
முன்னெடுப்பதற்காக விதிக்
கப்படும் அவசரகாலச்சட்டம்
உட்பட தமிழ் மக்களுக்கு
எதிரான அரசாங்கத்தின்
அனைத்து நடவடிக்கைகளுக்
கும் எதிர்த்து பாராளுமன்
றத்தில் சுதந்திரமாக செயல்
படப்போவதாக தெரிவித்துள்
ளார்,

ரெலோ அமைப்பைச்
சேர்ந்த வன்னி மாவட்டப்
பாராளுமன்ற உறுப்பினர்
அடைக்கலநாதன் தெரிவிக்
கையில் தமிழ் மக்களுக்கெதி
ரான அவசரகாலச் சட்டம்
மற்றும் தமிழ்மக்கள் மீதான
அடக்குமுறைகளை எதிர்ப்ப
துடன் அற்ப சலுகைகளுக்
காக தமிழ் இனத்தை விலை
பேசமாட்டேன் என்றும்
தெரிவித்துள்ளார். (வ)

மன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டு
நிறைவேற்றப்படவுள்ளது.

இக்கூட்டத்திலேயே பிரதி
சபாநாயகரும், பாராளுமன்ற
குழுக்களின் தலைவர்களும்
தெரிவுசெய்யப்படவுள்ளார்
கள்.

இன்றைய பாராளுமன்ற
கூட்ட நிகழ்ச்சிகளைப் பார்
வையிடுவதற்கு வெளிநாட்
டுத் தூதுவர்கள் இராஜதந்
திரிகள் கலந்து கொள்வதற்கு
வசதிகள் செய்யப்பட்டுள்
ளன.

அரசாங்கக் கட்சி வரிசை
யில் 116 பாராளுமன்ற
உறுப்பினர்களும் எதிர்க்கட்சி
வரிசையில் 109 எம்.பிக்க
ளும் அமரவுள்ளனர்.

பாராளுமன்றத்தின் இன்
றைய நிகழ்வையொட்டி
பாராளுமன்ற வளவு தீவிர
பாதுகாப்பிற்கு உட்படுத்தப்
பட்டுள்ளது. (வ)

**நேரடி..**

● மேஜர் சபேசன்

அதேதினம் கரவெட்டியில்
இடம் பெற்ற நேரடி மோத
லில்

● மேஜர் தமிழினியன்

ஆகியோர்உயிரிழந்துள்ளதாக
தமிழீழ விடுதலைப் புலிகள்
அறிவுத்துள்ளனர். [வ[

மூவர் செல்வதற்கு அனுமதி
வழங்கப்பட்டுள்ளது.

பாராளுமன்ற நுழை வாச
லில் பாராளுமன்ற உறுப்பி
னர்கள் உட்செல்வதற்கு வச
தியாக முன் வாசலில் அங்
கத்தவர்களின் முழுமையான
விபரங்களும் அதில் தொங்க
விடப்பட்டுள்ளதாகத் தெரி
விக்கப்படுகிறது. (வ)

**சபாநாயகராக...**

குழு நேற்றுக் கூடி முடிவெடுத்
துள்ளது

கட்சித் தலைவர்
ரணில் விக்கிரம சிங்கா தலை
மையில் நடைபெற்ற செயற்
குழுகூட்டத்தில் கட்சித் தலை
மையை மாற்றி அமைக்கு
மாறு ரணில் விடுத்த வேண்டு
கோள் நிராகரிக்கப்பட்டு
அவரையே தொடர்ந்தும் கட்
சியின் தலைவராகநியமிப்பது
என செயற் குழு தீர்மாணித்
துள்ளது,

பொஜன ஐக்கிய முன்னணி
சபாநாயகர் பதவிக்கு இதுவ
ரை எவரையும் தெரிவு செய்
யாமையால்அனுராபண்டார
நாயக்கா ஏகமனதா சபா
நாயகராக தெரிவு செய்யப்ப
டுவாரென கொழும்பு அரசி
யல் வட்டாரங்கள் தெரிவித்
துள்ளன. (வ)


# வெளிவந்துவிட்டது

## (படி)

ஆசிரியர்கள், கல்வியாளர்கள், பயிற்சியா
ளர்களுக்குஉதவக்கூடிய கட்டுரைகள் அடங்கிய
சஞ்சிகை

**படி**

**மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக்கொள்ள**

ஏக விநியோகஸ்தர்

**மக்மில்லன் புத்தகசாலை**

**3, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.** (கி-883)



இப் பத்திரிகை ''வலம்புரி'' அன் கோ ஸ்தாபனத்தின
ரால் இல.15, வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் எனும் விலா
சத்தில் அமைந்துள்வு அவர்களது அச்சகத்தில் 2000ஆம்
ஆண்டு ஒக்டோபர் மாதம் 18ஆம் திகதி அச்சிட்டு வெளி
யிடப்பட்டது.